924

Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 14—No. 2.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே "

| மலர் 14 | விக்கிரம ஆண்டு மாசித் [illegible]<br>1941ஆம் பிப்ரவரி [illegible] | இதழ் 2 |
|---|---|---|

உள்ளுறை பக்கம்

சைவ இளைஞர் மகா நாட்டுத் தலைவர் வரவேற்புரை ... [illegible]
சைவ இளைஞர் மகா நாட்டுத் தலைமையுரை ... 67
ஆசிமொழி ... ... .... 89
தமிழ் இலக்கிய மகா நாட்டுத் தலைமையுரை ... 98
அகில இலங்கைச் சைவ மகா நாடு ... ... 120
அகில இலங்கைச் சைவ மகா நாட்டுத் தலைமையுரை... 123

ப[illegible]யர் : திரு. வி. உலகநாத. முதலியார்

சித்தாந்த மகாசமாஜம்
கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1941 தனிப் பிரதி அணா 4

உ

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜத்தின் சார்பில் சிதம்பரம் ஆருத்திரா தரிசனத்தன்று முற்பகல் பத்தரை மணிக்குத் தில்லைச் சிற்றம்பலவாணர் திருவடியில் நமது சமாஜப் பதிப்பாகத் திருவாசகம் மூலமும் பல ஆராய்ச்சி அகராதிகளும் சமர்ப்பிக்கப்பெற்றன. கனகசபைக் கெதிரில் திரு. அள. சுப. பள. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. திருவாசகத்தின் பெருமை, வாதவூரடிகள் கனிவு முதலியன பற்றிப் பல அன்பர்கள் பேசினார்கள். இவ்வெளியீட்டுக்குப் பொருளுதவி செய்த திரு. ராம. கும. சு. குமரப்ப செட்டியார் அவர்கட்கும் பிறர்க்கும் காரிய தரிசி வந்தனமளித்தனர்.

2. சிவநேசர் திருக்கூட்டம் இவ்விழாவில் இருநாட்கள் பொதுக்கூட்டங்கள் கூட்டிச் சமயப் பிரசாரம் செய்தது. ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்யாசாலையில் இக்கூட்டங்கள் திருவாளர்கள் கா. சுப்பிரமணியபிள்ளை, ம. பாலசுப்பிரமணிய முதலியார் தலைமைகளில் 10-1-41, 11-1-41 தேதிகளில் நடந்தன. திருவாளர்கள்-பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், திரு. வி. உலகநாத முதலியார், மு. அருணாசலம் பிள்ளை முதலிய பல அன்பர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

3. பழனி தேவஸ்தானத்தின் சார்பில் ஒரு ஆகமபாடசாலை தொடங்கப்பட்டுள்ளது. மதுரையிலும் தருமபுரத்திலும் இப்பாடசாலைகள் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

4. நமது சமாஜத்தின் தைமாதக் கூட்டம் இராயப்பேட்டை குகாநந்த நிலையத்தில் 1-2-41-ல் திவான்பகதூர் - திரு. கீ. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் தலைமையில் நடந்தது. ராவ்பகதூர் திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியாரவர்கள் "வட நாட்டில் சமயப்பற்று" என்பதுபற்றிப் பேசினார்கள். இச்சொற்பொழிவின் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.

5. நமது சமாஜ உதவித்தலைவர் திரு. கீ. தெய்வசிகாமணி முதலியாரவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை நமது சமாஜமும் சென்னை வேதாந்த சங்கமும் கொண்டாடும் விவரங்களை இதனோடு இணைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி முறையிற் காண்க.

6. மதுரையில் தமிழிலக்கிய மகாநாடு ராவ்சாஹெப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தலைமையில் 18, 19-1-41 தேதிகளில் நடந்தது. பல அறிஞர்கள் உபந்நியசித்தனர். பல தீர்மானங்கள் நிறைவேறின. தலைமைப் பேருரையை இவ்விதழிற் பிறிதோரிடத்திற் காண்க.

உ

சிவமயம்

## கீழை கிழார்

# மணி விழாச் சொற்பொழிவுகள்

அன்புடையீர்,

நிரம்பிய சமயப்பற்றும் தமிழார்வமும் உடைய, சென்னை அரசாங்கத்தில் கூட்டுறவுக் கழகக் கூட்டுப் பதிவாளர் (Joint Registrar of Co-operative Societies) பணி புரிந்து ஓய்வுபெற்றுள்ளவரும், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் உதவித் தலைவரும், தொண்டைமண்டல உயர்நிலைப்பள்ளி முதலிய பல நிலையங்களின் நிர்வாக உறுப்பினருமாகிய சைவத்திருவாளர்-திவான்பகதூர் - கீழைச்சேரி தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் (=கீழை கிழார்) செவ்விய வாழ்நாளில் நிகழும் அறுபதாவது ஆண்டு நிறைவைச் சென்னை வேதாந்த சங்கம், சைவ சித்தாந்த மகா சமாஜம் ஆகிய இரு நிலையங்களும் "கீழை கிழார் மணி விழாச் சொற்பொழிவுகள்" மூலமாகக் கொண்டாடும் முறையில் இச்சொற்பொழிவுகள் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில், 1941ஆ பிப்ரவரி 10-ந் தேதி திங்கட்கிழமை தைப்பூச நன்னாளன்று மாலை 6 மணி முதல் பின்புறம் விவரிக்கப்படும் முறையின்படி நடைபெறும். தாங்கள் தங்கள் சபையினரோடும், வாழ்க்கைத்துணை மக்கள் முதலிய உறவினரோடும், ஏனைய அன்பர்களோடும் இச்சொற்பொழிவுகளைக் கேட்டின்புறுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்

தே. பொ. மீனாட்சிசுந்தரன்

ம. பாலசுப்பிரமணியன்

பணியாளர்கள்

## நிகழ்ச்சி முறை

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்
சொற்பொழிவுகள்

10-2-1941 திங்கள் மாலை 6–8 "உள்ளமும் உருவமும்"
15-2-1941 சனி ,, ,, "உள்ளுணர்வும் வழிபாடும்"
16-2-1941 ஞாயிறு ,, 4–6 "உள்ளொளி"

திருவாளர் - வித்வான் - தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள்
M. A., B. L., M. O. L. சொற்பொழிவுகள்

22-2-1941 சனி மாலை 6–8 "வினையின் விளைவு"
23-2-1941 ஞாயிறு ,, 4–6 "கைவினை" (சடங்குகள்)
24-2-1941 திங்கள் ,, 6–8 "நிறைநல்வாழ்வு"

திருவளர்செல்வி - ச. ந. இராஜேசுவரியம்மையார் அவர்கள்
M. A., L. T. சொற்பொழிவுகள்

2-3-1941 ஞாயிறு மாலை 4–6 "காணா ஒளியும் கேளா ஒலியும்" (முற்பகுதி)
3-3-1941 திங்கள் ,, 6–8 மேற்படி (பிற்பகுதி)

திருவாளர் - கே. கோதண்டபாணி பிள்ளையவர்கள், B. A.,
சொற்பொழிவுகள்

7-3-1941 வெள்ளி மாலை 6–8 "தமிழும் கடவுட் கொள்கையும்"
8-3-1941 சனி ,, 6–8 "பாகலன்"
9-3-1941 ஞாயிறு ,, 4–6 "களவும் கற்பும்"

திருவாளர் - டி. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள், M. A.
சொற்பொழிவுகள்

14-3-1941 வெள்ளி மாலை 6–8 "அத்வைதம்"
15-3-1941 சனி ,, ,, "விசிஷ்டாத்வைதம்"

திருவாளர் - மயிலைகிழார் இளமுருகனார் சொற்பொழிவு

16-3-1941 ஞாயிறு மாலை 4–6 "நான் நம்புவன"

பல பேரறிஞர்கள் சொற்பொழிவுகள், பாராட்டுரைகள்,
நன்றி கூறல்

22-3-1941 சனி மாலை 6–8 } இவ்விரு நாள் நிகழ்ச்சிமுறை
23-3-1941 ஞாயிறு ,, 4–8 } 10-3-1941ல் வெளிவரும்.

Sadhu Press...

Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 14 | விக்கிரம ஆண்டு மாசித் திங்கள் 1941ஆம் பிப்ரவரிமீ | இதழ் 2

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
35-வது ஆண்டு நிறைவு விழா, மயிலம்
சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைவர்

## திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள், M.A.

## வரவேற்புப்பா

பஃறாழிசைக் கொச்சகக் கலி

தரவு

உலகமெலாம் புகழ்விரிக்கே உளங்கொள்ளுந் தமிழ்த்துறை
பலகலைதேர் கழகத்தார் பாராட்டச் செயல்புரியும் [யுள்
அலகில்கலைப் புகழ்படைத்த அருணைமலைப் பெயர்வாய்ந்த
நிலவுறுசீர் மிகப்படைத்த நேயங்கொள் இளையோனே !

தாழிசை

ஏட்டிலே காண்கின்ற எழுத்துமோர் பிழைநீக்கி
பாட்டிலே சரிகாணும் பாட்டனும் நீயன்றோ

ஆண்டிலே மிகஇளையை அறிவிலே மிகமுதியை
காண்தகைய நின்பருவம் காண்பார்க்கு வியப்பிற்றே 2

சைவத்தை மேற்கொண்டே சார்தொண்டு மிகப்புரிந்தோர்
எவ்வத்தை மிகவென்ற இளைஞர்குழாந் தாமலரோ 3

அகத்தியர்க்குப் போதித்தும் அரும்பொருளைத்[1] தான்கேட்டும்
செகத்திலே ஓரிளையோன் செய்தொண்டை யாமறிவோம் 4

என்பைத்தான் பெண்ணாக்கி இகழ்வேற்றுச் சமயிகளும்
அன்பைத்தான் கொள்ளும்வகை அமைத்தவனோர் இளைஞனன்றோ.

வன்முதலை பிள்ளைதர வாய்மொழியைச் சொற்றவனும்
இன்முதலை[2] ஏவல்கொண்ட இணையற்ற இளையோனே 6

அருணந்தி முதலானோர் அகப்பற்றை ஒழித்தவனும்
பொருணந்து போதஞ்சொல் புலமைமிகு இளையோனே 7

பாட்டுள்ளே அடங்காத பலஇளைஞர் தொண்டாற்றி
நாட்டுள்ளே குன்றாத நற்புகழைப் பெற்றாரே 8

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

முருகன் கவுணியன் நம்பி மெய்கண்டான்
உருகன் புடைய உலகுறு இளைஞர்
செய்பெருஞ் சைவச் சீரிய தொண்டை
இன்றைய இளைஞர் இனிதினிற் கொள்ள
பல்கலைப் புலவ! பரிவொடு வந்தே
சொல்கலைக் குழுவில் சூழவீற் றிருந்தே
செய்வகை உரைப்பாய்ச் சேயின்
மெய்வகை அருளால் மேதினி வாழ்ந்தே.

---

குறிப்புரை:—[1]இறையனார் களவியலுரை. [2]இனிய முதன்மை வாய்ந்த சிவபெருமானை

[illegible] — திரு. அடிகளாசிரியர், தமிழ்க் கல்லூரி, மயிலம்.

18964

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்
## 35-வது ஆண்டு நிறைவு விழா, மயிலம்
## சைவ இளைஞர் மகாநாட்டுத்
# தலைமையுரை

(திரு. மு. அருணாசலம், எம். ஏ.)

(23—12—1940)

---

சைவ சகோதரர்களே,

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டு விழாவைத் திருமயிலமென்னும் இந்தத் தலத்திலே இறைவன் திருவருள் கூட்டிவைத்திருக்கிறது. என்றும் இளையவனாகிய முருகக்கடவுள் மனமுவந்து எழுந்தருளியிருக்கிற 'மயிலந்தண் மாமலை'யாகிய இந்தத் திருப்பதியிலே சைவ இளைஞர் மகாநாடு இவ்வாண்டு கூடுவது மிகவும் பொருத்தமுடையது. முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகப்பெருமான். அவனது திருப்புகழைப் பேசவும் அவனுக்கு உவந்த காரியங்களைச் செய்யவுமே நாம் இங்குக் கூடியிருக்கிறோம்.' நம்மனைவருடைய உள்ளத்திலும் அவன் என்றும் நீங்காமல் உறைவானாக.

சமயத்தைப் பற்றிப் பேசவும், கடவுள் தத்துவத்தை ஆராயவும் இளைஞருக்கே அதிக உரிமையுண்டு. நமது சமயகுரவர்களில் முதல்வரான திருஞான சம்பந்தப் பெருமான் பால்மணம் மாறாத சிறுவரல்லவா? தம்பிரான் தோழரும் மணக் கோலத்தோடு விளங்குகின்ற இளைஞரல்லவா? பண்டைமறை வண்டு அரற்றப் பசுந்தேன் ஞானம் பரி

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே ”

என்னும் திருமந்திரம் முதலாகிய திருவாக்குக்கள் அன்பே சிவம், அன்புநெறியே சிவநெறி என்ற கொள்கையை வலியுறுத்தவே எழுந்தன. இறைவனைக் கருணை மூர்த்தியாகப் பாவிக்கும் இயல்பு எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான தொன்றே எனச் சிலர் கருதலாம். இந்த அன்பு நெறி எல்லாக் காலத்தும் எல்லாச் சமயங்களுக்கும் ஓரளவு உடன்பாடு தான்; இருப்பினும், சைவ மக்கள் இதைக் கொள்கை யளவில் மாத்திரமன்றிச் செயலிலும் கொண்டு போற்றி ஒழுகியிருக்கிறார்கள். பண்டைக் காலத்தில் மட்டுமன்றி இக்காலத்தும் அன்பு நெறியே சைவநெறி என்பது சைவருக்கு ஒப்ப முடிந்த உண்மை.

சைவம் அன்புநெறி என்ற கருத்தை மனத்தில்கொண்டு ‘ அப்பாலும் அடிச்சார்ந்தார் ’ என்பதுபோன்ற தொடர்களின் பொருளைக் குறுக்காமல் விரிக்க வேண்டுமென்று கருதுகிறேன். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடிய காலத்துக்கு முன்னும் பின்னும் தோன்றிய அடியார்களும் தமிழ் வழங்கும் எல்லைக்கு அப்பால் தோன்றி சிவபரம்பொருளின் திருவடிகளை இறைஞ்சும் அடியார்களும் இத்தொடருக்கு இலக்கியமானவர்களென்று கொள்ளுகிறோம். சைவ சமயத்துக்கு அப்பால் நின்று அன்புத் தொண்டாற்றும் அடியார்களையும் இதற்கு இலக்கியமாகக் கொள்ளலாம். புறச்சமயத்திலே நின்று அன்பு நெறியே நெறியாகக்கொண்டு ஒழுகிய சாக்கிய நாயனாரை இன்று அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராகக்கொண்டு நாம் போற்றி வருகிறோம். இவருடைய வழிபாட்டைக் கூறுமிடத்து, சேக்கிழார் பெருமான்,

“ வேளாளர் குலத்துதித்தார் மிக்கபொருள் தெரிந்துணர்ந்து
கேளாகிப் பல்லுயிர்க்கும் அருளுடைய ராய்க்கெழுமி
நீளாது பிறந்திறக்கும் நிலைஒழிவேன் எனநிற்பார் ”

என்று பாராட்டுகிறார். இந்நாயனாருடைய சிறப்பான



தொண்டு, சிவபெருமான்மீது அன்பு மலராகிய கல்லை எறிந்து வழிபட்டமையேயன்றி, பல்லுயிர்க்கும் அருளுடையராய்க் கெழுமிய திறம் என்பது சேக்கிழார் கருத்து.

பல்லுயிர்க்கும் அருளுடைமையே தம் சமயமாகக் கொண்டவர் புத்தர் பெருமான். அவருடைய இறுதி நாட்களில், சமய தத்துவ ஆராய்ச்சியாளர் சிலர் அவரை யணுகி, கடவுளைக் குறித்து அவருடைய கருத்து என்னவென்று கேட்டபொழுது, ‘ எனக்குத் தெரியாது ’ என்று அவர் விடை கூறினாராம். இவ்வரலாற்றின் கருத்தென்ன ? உயிர்களிடத்தே கருணையோடு ஒழுகுபவர் மறுமையைக் குறித்துச் சிந்திக்கவேண்டியதில்லை யென்பதே. புத்தரது மதம் அன்புமதம், சமயம் அன்புச்சமயம், வாழ்க்கை அன்பு வாழ்க்கை. எனவே, அவருடைய வாழ்க்கையில் அன்பு என்ற ஒரே தத்துவத்தைத் தவிர வேறொன்றுக்கும் இடமில்லை. இதுவே அவருடைய கடவுள் தத்துவம் என்றுங் கூறலாம். அன்பே சிவம் என்ற சமயக் கோட்பாட்டையுடைய சைவப் பெருமக்களுக்கு, அன்பே தமது சமயமாகவுடைய, அன்புச் சமயத்துக்கே தம் வாழ்நாளை அர்ப்பணம் செய்த புத்தர்பிரான் தலைசிறந்த சைவரல்லவா ? புத்தரையே அப்பாலும் அடிச்சார்ந்தாருக்கு இலக்கியமாகக் கொண்டு நாம் வழிபடுதலும் தகும் என்று கூறத் தோன்றுகிறது.

கலிங்கப்போர் வென்ற அசோக சக்கரவர்த்தி, போர்க் களத்திலே இறந்துகிடந்த வீரரையும் சிந்தியிருந்த இரத்தத்தையும் கண்டு, ஆயுதங்களைத் துறந்து, ‘ இவ்வுலகத்தையே அன்பினால் வெல்வேன் ’ என்று விரதம் பூண்டார். அவருடைய காலத்தே அகிம்சையாகிய அன்புநெறி ஒன்றே புத்த சமயத்தின் சிறப்பியல்பாக இருந்தது. அசோகர் புத்த சமயத்தைச் சரணடைந்து, தம் நாடு முழுதும் அச்சமயத்தைப் பரப்பியதோடன்றி, திபேத்து, சீனம், ஈழம் முதலிய நாடுகளுக்கும் சமயப் பிரசாரகரை அனுப்பி, கோடிக்கணக்கான மக்கள் அன்பு நெறியை மேற்கொண் டொழுகச் செய்தார். அன்று தொட்டு இன்றுவரை இந்த நாடுகளிலே புத்த சமயம் பெரி

தும் ஓங்கி வளர்ந்து வந்திருக்கிறது. இந்த வளர்ச்சிக்குக் காரணம், புத்தர் போதித்த அன்புச் சமயமானது மக்களுள்ளத்திலே இயல்பாக அமைந்துள்ள அன்புடைமை, இரக்கம் என்ற சிறந்த மக்கட் பண்பைப் பயன்படுத்திக் கொண்டு, மக்களைத் தன்பால் ஈர்த்துக்கொள்ளுந் தன்மை பெற்றிருந்தமையே.

அசோக மன்னர் கோடிக்கணக்கான மக்களைத் தாம் மேற்கொண்ட புத்தசமயத்தின் வழியொழுகுமாறு செய்தது எதனால்? வாளினாலன்று, பொருளினாலன்று; அன்பு என்னும் ஓரே ஆயுதத்தினால்தான்.

இன்றும் மத மாற்றங்களைப் பார்க்கிறோம்; இவையனைத்தும் பொருளையும் பிரதிபலனையும் குறியாகக் கொண்டவை. பிறநாடுகளிலிருந்து இங்குவந்து சமயப் பிரசாரம் செய்வோர், இங்குள்ள தாழ்ந்த சாதி மக்களிடையிலே சென்று அவர்களுக்குத் தொழில்களை வகுத்துக் கொடுத்தும், உத்தியோகங்களைப் பெற்றளித்தும், தாராளமாகப் பொருளைச் செலவிட்டும் அவர்களைத் தம் மதத்துள் சேர்க்கின்றனர். இம்மாற்றங்களில் அன்பு என்பது மருந்துக்கும் இல்லை. இது எவ்வளவு பேதைமை!

முற்காலத்திலே புத்தரும் அசோகரும் சமயப் பிரசாரம் செய்தபோது, மன்னனையும் மந்திரிமாரையுமே முதலில் தம் மதத்திற்கு மாற்றினர். குடிகள் பின்னர் அரசனைப் பின்பற்றினர். ஞானசம்பந்தப் பெருமானும் பாண்டி மன்னனைத்தான் முதன் முதலில் தமது அன்பினால் வென்று சைவனாக்கினார். மக்கள் தாமாகவே சைவநெறி சார்ந்தனர். இவையல்லவோ அன்பினால் விளைந்த மதமாற்றங்கள்!

திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் பௌத்தர்கள் கண்டித்து ஒதுக்கப்பட்டிருக்கின்றார்களே, புத்தருக்கு இவ்வளவு ஏற்றங் கூறுவது பொருந்துமா என்ற ஐயம் எழுதல் இயல்பே. அங்கே கண்டிக்கப்பட்ட பௌத்தர், புத்தரது உபதேசங்களை மறந்து, அவர்கொண்டிருந்த அன்புச் சமயத்தினின்றும் நழுவி, வெறுந் தத்துவ விசாரணை செய்து



தருக்கித் திரிந்த பிற்காலப் பௌத்தர். இவரைக் கண்டித்தொதுக்கியது முறையே. புத்த சமயத்தைத் தோற்றுவித்த புத்தருக்கும் அவர் போதித்த அன்பு நெறிக்கும் இதனால் இழுக்கொன்றுமில்லை.

உலகத்திலே இன்று நாம் என்ன காண்கிறோம்? பெரிய பெரிய சாம்ராஜ்யங்களும் ஏகாதிபத்தியங்களும் தம்மினும் பெரிய நாடுகளையும் மக்கள் தொகுதியையும் வென்று கொடுமையாலும் ஆயுதபலத்தாலும் அடிமைப் படுத்திவைத்திருக்கின்றன. இந்த வல்லரசுகளுக்குள்ளேயே பரஸ்பரம் இருந்து வந்த பொறாமைத் தீயானது இப்போது சுடர்விட்டுப் பெருநெருப்பாக எரிகின்றது. இதன் பயன் என்ன ஆகுமென்று சொல்லமுடியாது. முடிவில்பொறாமையும் துக்கமும் விரோதமுமே எஞ்சி நிற்கப்போகின்றன. இவற்றுக்குக் காரணம் யாது? இவ்வல்லரசுகளின் செயல்களில் அன்பு சிறிதுகூட இடம்பெறாமல், செயல்கள் முற்றும் வன்மையாக இருந்தமையே. தீயானது தான்பற்றிய பொருள்களனைத்தையும் சுட்டுச் சாம்பராக்கி விட்டு முடிவில் தானும் எஞ்சாது அழிந்துபோகிறது. அதேபோல, இவ்வன்மையானது பிறபொருள்கள், மக்கள், நாடுகள் எல்லாவற்றையும் அழிப்பதோடன்றி, தன்னையும் அழித்துக் கொள்ளுகிறது. சூனியம் ஒன்றே எஞ்சுகிறது. எனவே, வன்மை வெறுமை என்பதை இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

அன்பு ஒன்றே அனைத்துயிரையும் பிணிக்கவல்லது என்பதை அசோக சக்கரவர்த்தியின் செயல்களிலிருந்து நாம் உணருகிறோம். ஆயினும், அம்மன்னனைக் கவர்ந்த அன்புநெறியாகிய புத்தசமயம் நமது நாட்டில் இல்லாது அறவே ஒழிந்துபோய் விட்டது. இதற்குக் காரணம் என்ன? வைதிக சமயத்தார் பௌத்தத்தை இடைவிடாமல் கண்டித்து வந்தார்கள்; வேதம் முதலியவற்றுட் கூறப்படும் யாகங்களில் நடந்த உயிர்வதையை ஒழிக்கவே பௌத்த சமயம் தோன்றியதாதலால், அவ்வுயிர்வதைகள் நின்றவுடன் பௌத்தமும் மறைந்து விட்டது; பிற்காலத்திலே பௌத்தர் வெறுந் தத்துவ விசாரணையி

லிறங்கித் தமது அன்பு நெறியை நழுவவிட்டனர் என்றெல்லாம் காரணங் கூறலாம். இவையெல்லாம் ஓரளவுக்கு உண்மையேயாயினும், மற்றொரு முக்கிய காரணம் உண்டு. அன்பு நெறியிலே மட்டும் நின்ற புத்த சமயமானது உயிர்களிடத்திலே ஏன் அன்பு செலுத்த வேண்டும் என்பதற்குத் தக்கதொரு விடை கூறவில்லை. அன்றியும், நமது நாட்டிலே மக்களுக்கு இயல்பாகவே கடவுள் பக்தியும் கடவுளுணர்ச்சியும் அதிகம் உண்டு; மக்களிடத்தே அமைந்திருந்த இந்த இறையுணர்ச்சியைப் புத்த சமயம் சிறிதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இவ்வுணர்ச்சிக்குத் தக்க பற்றுக்கோடு பெறுமையால் மக்கள் புத்த சமயத்தை நெகிழவிட நேர்ந்தது.

இந்த விஷயத்திலே தான் சைவ சமயத்தின் சிறப்பான ஓர் அம்சம் புலப்படுகிறது. சைவ சமயமும் அன்புநெறியேயாகும் என முன்னர்க் கூறினேன்; வெறும் அன்புநெறி என்ற தனித்த நிலையைக் கடந்து நமது சமயம் மேலே சென்று, 'உயிர்களனைத்தும் இறைவன் விரும்பி யுறையும் கோயில்கள்; உயிர்களிடத்து அன்பு செலுத்துவது இறைவனை வழிபடுவதை ஒக்கும்; ஆகவே, உயிர்களை இறைவனாகக் கருதி அன்பு செலுத்தி வழிபடுக' என்று போதிக்கிறது.

"எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்
றெவ்வுயிர்க்கும் அன்பா யிரு"

என்றும்,

"எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகும்
இலங்கும்உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்"

என்றும்,

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்றும் நம் சமயப் பெரியார்கள் அறிவுறுத்துகிறார்கள். எனவே மக்களிடத்து அன்புபூண்டொழுகுவதே சைவநெறியின் முதற்படி என்பதும், அதுவே சிவபெருமான் திருவருளை நாடி நிற்பதற்கேற்ற எளிய வழி என்பதும் விளங்கு



கின்றன. இவ்வுண்மையை உணர்ந்து நமது வாழ்க்கையை அன்பு நெறியிலே நடத்தவேண்டும்.

அன்பு நெறியிலே ஒழுக வேண்டுமாயின், எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். நமது சமூகத்திலுள்ள மக்களுட் பெரும் பகுதியினர் எளியவர்கள். அவர்களுடைய இன்ப துன்பங்களை யுணர்ந்து அவர்களுக்கு நாம் தொண்டு செய்யவேண்டுமாயின், நம் வாழ்க்கையும் அவர்களுடைய எளிய வாழ்க்கையை ஒட்டியதா யிருக்கவேண்டும். இறைவனும் ஏழைபங்காளன் அல்லவா? வாழ்க்கையின் இலக்ஷியங்கள் சிறந்தனவாக இருக்கலாம்; ஆனால், வாழ்க்கை ஆடம்பரமற்று எளிய முறையிலே அமைந்திருக்க வேண்டும். எளிய வாழ்க்கை யென்பது இயற்கையோடொத்த வாழ்க்கை - தூய வாழ்க்கை - இன்பந் தரும் வாழ்க்கை. ஆடம்பரத்தையும் பயனற்ற வெறும் படாடோபங்களையும் நம் வாழ்க்கையினின்றும் அகற்றித் தூரத்தே நிறுத்தி விடுவதனால், நம் உடலுக்கு ஊறுசெய்யும் பிணிகளும் மிடியும் அகலவே நின்றுவிடுகின்றன. நோயில்லாது உரம்பெற்ற உடம்பு படைத்தவர் எத்தகைய பணிக்கும் தகுதியுடையவராவார்; ஊக்கந் தளராது எத்தொழிலையும் சாதிக்க வல்லவராவார்.

சைவ இளைஞர்கள் சமயத்துக்கும் இந்நாட்டு மக்களுக்கும் தொண்டு புரிவதே தங்கடனெனக் கொண்டு வாழ்தல் சிறப்பு. தங்கள் தங்களுக்குரிய மற்றத் தொழில்களுக்கு இடையூறு நேரிடாத முறையில் அவர்கள் பணிசெய்யலாம். இளைஞர்கள் பணிசெய்ய முன்வந்தால் அது தன்னலமற்ற தொண்டாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை. இத்தொண்டு தன் நினைவற்ற தொண்டாகவும் இருக்கவேண்டும். உயிரினிடத்தே அநாதியாக நிலைபெற்ற இருளைக் கடிந்து சோதிரூபமாக எழுந்தருளியுள்ள சிவஞாயிற்றை, மணிவாசகப் பெருமான்,

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்"

என்று கூறி வழிபடுகிறார். 'நினைப்பற நினைந்தேன்' என்ற தொடரை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். நினைந்தேன் என்ற மாத்திரத்திலே, நான் என்ற ஒரு பொருள் தோன்றி முனைத்து நிற்கிறது. நிற்கவே, நினைக்கப்படும் பொருளாகிய பரம்பொருள் நினைப்பவனிடத்தே ஒன்றாது, புறம்பாகத் தூரத்தே அகன்றுவிடுகிறது. நினைப்பவன் தன் வயத்தனாக இருக்கிறானேயன்றி, இறைவனது திருவருள் வயத்தனாய் நிற்கும்நிலை இவனுக்குக் கைகூடவில்லை. இந்த உண்மையையுணர்ந்த மாணிக்கவாசக சுவாமிகள் தம்மிடத்தே சிவம் பிரகாசித்ததைக் கூறுமிடத்து, சிவத்தைத் தாம் நினைத்தார் என்ற உணர்ச்சியும் அற்று, நினைப்பவராகிய தாமும் நினைக்கப்படும் பொருளாகிய சிவமும் இரண்டற்ற ஒன்றாகி விட்டதைக் கூறுகிறார். அவருடைய இந்த அனுபவ நிலையைக் கருத்திலிருத்துதல் நன்று. இளைஞர்கள் சமயத்துக்காகப் புரியும் தொண்டு ஒவ்வொன்றிலும் 'நான் செய்கிறேன்' என்ற நினைவை அறவே அகற்றிவிட்டு, எடுத்த காரியம் செவ்வனே நிறைவேறவேண்டும் என்ற ஒரே நினைவோடிருக்கவேண்டும். பயன்பெறுவதையும் கருதாது, செய்யும் பணியிலே தன்னை மறந்துவிட்டால், அப்பணியே சிறந்த பலனாகும்; இன்பத்துக்கும் இடமாகும்; தன் நினைவு இருக்கிறவரையில் செயலிலே மனவெழுச்சி குறையும்; காரியம் வெற்றி பெற வேண்டுமே என்ற கவலையினால் செயலும் செவ்வையாக நிறைவேறாது. செய்யும் செயல்களில் வெற்றி பெறுவதற்கு ஒரு சிறந்த சாதனம், நன்மை தீமைகளால் அசைவுறாத மனநிலை. தற்பெருமைக்கிருப்பிடமாகிய தன் நினைவை அகற்றவே, வெற்றி தோல்விகளால் மனம் சலனமடையாது; கடமையைச் செய்வதிலேயே மனம் உறுதியாக நிற்கும்.

சைவ மக்களிடையே சமய உணர்ச்சியும் சமய அறிவும் சமய உண்மைகளில் அழுத்தமான பற்றும் பெருகவேண்டும். இவை பெருகுவதற்கு மூன்று வழிகளைக் கூறலாம்; முதலாவது, நமது சமய நூல்களையும் பிற நூல்களையும் கற்பது; இரண்டாவது, சமய போதனைகளைக் கேட்டுச் சிந்திப்பது; மூன்றாவது, ஆலயங்களிலே வழிபாடுசெய்வது.



சமய நூல்களைக் கற்பதென்றால், சைவ நூல்களெல்லாம் அச்சில் வெளியிடப்படுதல் வேண்டும்; விரும்புவோர்க்கு அவை எளிதில் கிடைப்பனவாயும் இருக்கவேண்டும். ஆனால் அவை இன்று அவ்வாறில்லை. சைவ இலக்கியங்களிலும் தமிழ் இலக்கியங்களிலும் பெயரளவில் மட்டுமே அறியப்பட்டு, இன்னும் அச்சில் வெளிவாராத நூல்கள் பல இருக்கின்றன. சித்தியார் சுபக்க உரையிலே, சிவாக்கிரயோகிகள் தாம்'சித்தாந்த தீபிகை'என ஒரு நூல் செய்திருப்பதாகவும், சித்தியார் பரபக்ஷத்துக்கும் உரை செய்திருப்பதாகவும், இவற்றுள் சமயக்கருத்துக்கள் பலவற்றை விரிவாக உரைத்திருப்பதாகவும் கூறுகிறார். சிவப்பிரகாச உரைகளுள் பழமையான உரையைச் செய்தவராகிய மதுரைச் சிவப்பிரகாசர் தமக்கு முன்னும் பலர் அந்நூலுக்கு உரை செய்திருப்பதாக எழுதுகிறார். பல அரிய சித்தாந்த நூல்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார். இவையெல்லாம் இக்காலத்தே கிடைக்கவில்லை. தமிழ் நாட்டிலே ஒவ்வொரு கிராமத்திலும் ஏடுகள் தேடுவதற்கான முயற்சி செய்தால், மறைந்து போனவைகளாகக் கருதப்பட்டுள்ள நூல்களிற் சிலவேனும் கிடைக்கக் கூடும். அவசியமாய்ச் செய்யவேண்டிய இந்தப் பணியைச் சைவ இளைஞர் ஒவ்வொருவரும் மேற்கொள்ளலாம்.

அன்பர்கள் இவ்வாறு தேடிச் சேகரிக்கும் ஏட்டுப்பிரதிகளைச் சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசியவர்களிடம் கொடுத்து அவற்றைத் தக்கபடி உபயோகித்துக் கொள்ளச் செய்யலாம். அல்லது கிராமங்கள் தோறும் புத்தகசாலைகளும் வாசகசாலைகளும் அமைத்து, அவைகளிலே அரிய ஏடுகளையும், கிடைத்தற் கரியனவாய்விட்ட பழைய அச்சுப் புத்தகங்களையும் புதிய நூல்களையும் பெற்றுத் தொகுத்து வைக்கலாம். அந்த அந்த கிராமங்களிலுள்ளோர் இந்நூல்களையும் ஏடுகளையும் படித்தும் ஆராய்ந்தும் பயன்பெறலாம். அயலிடங்களி லுள்ளோரும் வந்து வேண்டியவற்றைப்

பார்க்கவும் பரிசோதிக்கவும் வசதியாயிருக்கும். ஏட்டுப் பிரதிகளின் அருமையை நம் மக்கள் அறியாமையால், அவைகளைப் போற்றி நல்ல நிலைமையில் வைத்து வருவதில்லை; பிரதிகள் சிறிது சிதிலமானவுடன் அவற்றை ஆற்றிலோ கடலிலோ எறிந்துவிடுகிறார்கள். இன்று கிடைக்கக்கூடியதாயிருக்கும் ஓர் ஏட்டுப் பிரதியானது அதற்குரியவரின் கவனக் குறைவால் அழிந்துபோய்விட்டால், மீண்டும் வேண்டுப் என்று நாம் தேடும்பொழுது கிடைத்தற்கரியதாய்ப் போய்விடலாம். ஆகவே, ஏட்டுப்பிரதிகளைத் தேடுவதற்கான முயற்சியை உடனே தொடங்க வேண்டுவது மிக அவசியமென்பதை மீண்டுமொருமுறை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

சமாஜத்தார் செய்துவந்திருக்கும் சமயத் தொண்டுகளில் தலைசிறந்தது, சமய இலக்கியங்களை மிக மிகக் குறைந்த விலையில் அழகாக அவர்கள் வெளியிட்டிருப்பது. பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திர வுரைகள், சிவஞானபாடியம், திருவாசகவுரை, அருணகிரியார் திருப்பாடல்கள் முதலிய சைவ நூல்கள் வெளிவந்திருக்கின்றன. சங்ககாலத்து இலக்கிய மனைத்தும் புதியமுறையில் அழகாகத் தொகுக்கப்பெற்ற சங்க இலக்கியம் என்னும் பெருநூலும் வெளிவந்திருக்கிறது. எளிய விலையிலே இந்நூல்கள் விற்கப்படுவதால் சைவ மக்கள் யாவரும் இவற்றை வாங்கிப் பயன்பெற முடிகிறது. இம்முறையிலே இன்னும் வெளிவர வேண்டிய நூல்கள் எண்ணிறந்தன உள்ளன. அவற்றுட் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

திருவிளையாடற் புராணம், கந்த புராணம், முதலிய அரிய புராணங்கள் வெளிவர வேண்டும். மதுரை சோமசுந்தரக் கடவுளுடைய பெருமையைக் கூறும் 'சுந்தர பாண்டியம்' என்ற புராணமொன்று இன்னும் அச்சிடப்பெறவில்லை; இந்நூலாசிரியராகிய அனதாரியப்பப் புலவருடைய புலமை தொண்டை மண்டல சதகத்திலும் பழம் பாடல்களிலும் பாராட்டப் பெற்றிருக்கிறது. சித்தாந்த சாத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் பல வுரைகள் இருக்கின்றன. இவற்றுட் சில அச்சானவை, சில அச்சாகாதவை. உதாரணமாக, சித்தியாருக்கு அறுவருரைக்கு மேலும் அச்சாகாத சில உரைகள் உள்ளன. சிவஞானபோதம், சிவப்பிரகாசம், திருக்களிற்றுப்படியார், திருவருட்பயன் முதலிய சாத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்றுக்குமேற்பட்ட உரைகள் உள்ளன. இவற்றுள் இரண்டொரு உரைகள்தான் அச்சில் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு சாத்திரமும் அதற்கேற்பட்ட பலவுரைகளோடும் சேர்ந்து தனித்தனித் தொகுதியாக வெளிவரவேண்டும். ஞானாமிர்தம், தத்துவப்பிரகாசம் போன்ற பெருநூல்களும், தேவிகாலோத்தரம், சருவஞானோத்தரம், துகளறுபோதம், சிவானந்தமாலை முதலிய பண்டைச் சாத்திரச் சிறு நூல்களும் சில சில தொகுதிகளாக வெளிவர வேண்டும். சைவச் சிறு நூல்களில் பெரும்பான்மையானவை இப்போது கிடைத்தற்கரியவாய்விட்டன. சைவ மக்கள் இந்நூல்களைப் பாராட்டிப் போற்றாவிட்டால் வேறு யார் இவற்றைக் கவனிக்கப் போகிறார்கள்? மதுரைச் சிவப்பிரகாசர் செய்த சிவப்பிரகாச வியாக்கியானத்தைக் கூர்ந்துகற்போருக்குச் சைவசாத்திரச் சிறு நூல்களின் அருமையும் அவற்றின் அவசியமும் புலனாகும். தமிழிலே கீர்த்தன ரூபத்திலுள்ள இசைப்பாட்டுக்கள் இல்லையென்பது பல இசைவாணருடைய கூற்று. நந்தனார் கீர்த்தனையையன்றி, பெரிய புராணக் கீர்த்தனை, திருவிளையாடற் கீர்த்தனை, கந்தபுராணக் கீர்த்தனை என்பன பழமையான இசைப்பெரு நூல்கள். இவற்றுள் ஒன்றேனும் இப்போது காண வியலாது. இவற்றை மீண்டும் உயிர்ப்பிப்பது தமிழ் நாகரிகத்தை உயிர்ப்பிப்பதாகும். திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் கூறப்பெற்றுள்ள விஷயங்களனைத்தையும் சேர்த்துத் தொகுத்த சித்தாந்தப் பொருளகராதி வெளிவரவேண்டுவது மிகஅவசியம்.



இவற்றை யெல்லாம் சமாஜத்தார் வெளியிடுவதற்குச் சைவ மக்களுடைய ஆதரவு ஒன்றே வேண்டியது. ஊர் தோறும் சைவநூல் நிலையங்கள் தோன்றுதல் அவசியமென்று கூறினேன். சமாஜப் பதிப்புக்களை எல்லா நூல்

நிலையங்களும் பெறவேண்டும். சைவமக்கள், படிப்பிலே ஆர்வமுடையோர் முதலிய யாவரும் வாங்கவேண்டும். சமாஜத்தார் பெரும்பான்மையான நூல்களை ஐந்நூறு அல்லது ஆயிரம் பிரதிகள் தான் அச்சிடுகிறார்கள். ஐயாயிரம் அச்சிட்டாலும் போதாது என்று சொல்லும்படி நூல்களை வாங்கும் சைவ மக்களின் தொகை பெருக வேண்டும்.

நமது சமய நூல்களைக் கற்பதோடு, பிற சமயங்களைச் சார்ந்தோர் செய்துள்ள தத்துவ நூல்களையும் அவர்கள் சமய சாத்திரங்களையும் இயன்றவரை கற்றுத்தெளிதலும் வேண்டற்பாலதே. இதன் பொருட்டு, இளமையிலேயே சைவ மக்கள் பல மொழிகளைக் கற்கத் தலைப்பட வேண்டும். சைவத்திலும் தமிழிலும் ஆர்வமுள்ளோர் யாவரும் முக்கியமாக வடமொழிப் பயிற்சியுடையோராயிருக்கவேண்டுமென்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை. வடமொழியோடு தொடர்பில்லாத சமயநூல்கள் இல்லை; எனவே, நமக்கு வடமொழியறிவு இன்றியமையாததாகும். அதனுடன், முக்கியமான பிற இந்திய மொழிகளையும், மேல்நாட்டுப் பண்டைய மொழிகளாகிய இலத்தீன், கிரீக் என்பனவற்றையும், இக்காலத்து மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் என்பவற்றையும் சிலர் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டும். மேல் நாட்டிலே இப்போது தோன்றுகிற அறிவுக்கலை நூல்களெல்லாம் ஆங்கிலத்திலேயே முதன் முதல் தோன்றிவிடுகின்றன என்று சொல்வதற்கில்லை. ஜெர்மன் பாஷையிலும், ருஷிய பாஷையிலும் அவை தோன்றுகின்றன. நூல்கள் அச்சானவுடனே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுவிடுகின்றன. ஆங்கிலேயரும் அந்நூல்களால் சிறந்த பயன் எய்துகிறார்கள். ஆகவே நம் இளைஞருட் பலர் பலபாஷைகளில் வல்லவராயிருப்பின், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் செய்து தருதல் எளிதாயிருக்கும்.

ஊர்தோறும் சைவப் பாடசாலைகள் தோன்றவேண்டும். பாடசாலை என்ற மாத்திரத்திலே, இரண்டு மாடி மூன்று மாடி கொண்ட கட்டிடங்கள் நம் மனத்தில் தோன்றுதல் இயல்பு. இது சரியன்று. இந்தப் பாடசாலைகள் திண்ணைகளி



லும் நடக்கலாம்; ஆலயத்தின் பிராகாரங்களிலும் நடக்கலாம். பழங்காலத்திலே கல்வியும் சமய அறிவும் ஆலயங்களிலேயே போதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இறைவன் சந்நிதியிலேயே மாணவர் பயில்வதும், பெரியோர் சமய உண்மைகளைப் பயிற்றுவதும் பெருவழக்கு. ஆலயங்களிலே கல்விப் போதனைக்காக மானியங்களும் கட்டளைகளும் அளிக்கப்பட்டிருந்தனவென்று சாசனங்களிலிருந்து அறிகிறோம். இப்பழைய முறையை இப்போது புதுப்பிக்கலாம். கல்விப் போதனையானது அன்புப் பணியாக ஆலயங்களிலே செய்யப்பட்டால், பொருள் இதற்குத் தேவையில்லை. திருமுறைகள், சாத்திரங்கள், வேறு இலக்கியங்கள் இவற்றைப் பயின்றவர் யாரேனும் ஒருவராவது ஒவ்வொரு சிற்றூரிலும் இருப்பர். இளைஞர்கள் இவருக்கு வேண்டிய ஊக்கமளித்து, தங்களுக்குச் சமய அறிவூட்டும்படி கேட்டுக்கொண்டு முறையாக நூல்களைக் கற்று வந்தால், அவர்களிடையே சமய அறிவும் சைவ உணர்ச்சியும் அழுத்தமாக உண்டாகும். ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற விரிந்த நோக்கத்தோடு இவர்கள் தாங்கள் பெற்ற அறிவையும் சமயக் கல்வியையும் தங்கள் ஊர்களிலுள்ள எழுத்தறிவில்லாத பாமர மக்களிடையே பரவச்செய்யலாம். இப்பாடசாலைகள் நிறுவி வேலை நிறைவேறுவதற்கு இளைஞரிடையே ஊக்கமும் உற்சாகமுமே வேண்டியவை. இவ்வித சமய போதனை தினந்தோறும் நடக்கவேண்டுமென்ற அவசியமில்லை. வாரமொருமுறை அல்லது கார்த்திகை, சஷ்டி முதலிய விசேட தினங்களில் இளைஞர்களும் பிறரும் ஒன்றுகூடி, தக்க அறிஞரைக் கொண்டு பிரசங்கங்கள் செய்விக்கலாம்.

ஆங்கில போதனையையே முக்கிய நோக்கமாகவுடைய பாடசாலைகளில் மாணவர்கள் இதுவரை தமிழ்பயின்று வந்திருக்கிறார்கள். அதன் பயனாக, தமிழ்ச் செய்யுட்களைப் பாட்டாகப் பாடவேண்டும் என்ற உணர்ச்சியே இல்லாமல், உயிரற்ற வசனமாகவே படித்து வந்திருக்கிறார்கள். செய்யுட்களை இசையோடு படித்தால்தான் அவற்றின் சொற்பொலி

வும் பொருட்பொலிவும் நயமும் புலனாகும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தமிழ் பயிற்றும்போது இதைக் கருத்திலிருத்தி, செய்யுட்களைப் பாடப் பழக்குதல் நலம்.

இசை சம்பந்தமாக ஒரு வார்த்தை சொல்லலாமென்று எண்ணுகிறேன். சிலப்பதிகார காலத்திலிருந்து நமது சமயாசாரியர் காலம் வரையுள்ள இலக்கியங்களைப் பார்ப்போமானால், தமிழிலே இசைவளம் எவ்வளவு மிகுதியாக இருந்தது என்பதை உணரலாம். 16-ம் நூற்றாண்டிலே வாழ்ந்த சைவ எல்லப்ப நாவலர் “மலகரி குறிஞ்சி தேசி பைரவி சுரும்பு பாடும் வயலருணை” என்று கூறுகிறார். இவ்வாறு சங்கீதம் சிறப்புற்று விளங்கிய தமிழ்நாட்டிலே இன்று தமிழ்ப்பாட்டுக்களும் தமிழ்க் கீர்த்தனங்களும் அருகிவிட்டன. சங்கிதக் கச்சேரிகளிலே பாடகர்கள் பாடும் பாட்டுக்கள் யாவும் இன்று தமிழல்லாத மொழிகள் மயமாகவே இருக்கின்றன ; தெலுங்கு முதலிய பிறமொழிப் பாட்டுக்களாகவே இருக்கின்றன. தமிழ்இசை வளரவேண்டுமாயின், இந்த நிலை மாறவேண்டும். தமிழ்ப் பாடல்கள் பாடுவோருக்கு ஆதரவு பெருகவேண்டும். பிறமொழிப் பாடல்களைப் பாடும் பாடகர்களை ஆதரிப்பது ஓரளவுக்கு நிற்கவேண்டும். தேவாரம், திருவாசகம் முதலிய அருள் நூல்களிலிருந்து தக்க திருப்பாடல்களைப் பொறுக்கியெடுத்து, சங்கீதத்துக்கு ஏற்ற முறையில் அமைத்துப் பல நூல்கள் வெளிவருமாறு செய்யவேண்டும். தேவாரங்கள் முதலியன பழைய பண் முறையில் அமைந்திருக்கின்றன. அப்பண்களை அறிந்தோர் இக்காலத்தே அரியர். தமிழ்நாட்டிலே இக்காலத்துப் பாடப்படும் கர்நாடக இராகங்கள் மக்களுக்கு உகந்தனவாயிருக்கின்றன. அன்றியும், வைஷ்ணவர்களுக்குரிய திருமுறையாகிய நாலாயிரப் பிரபந்தங்களைப் பார்ப்போமானால், எல்லாப் பாசுரங்களுக்கும் கர்நாடக ராகமும் தாளமும் வகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம் ; ஒரே பதிகத்துள் வெவ்வேறு பாடல்களுக்கு வெவ்வேறு இராகங்களைக் காணலாம். சைவத் திருமுறைகளிலும் இசைக்குத் தகுந்தவற்றைத் தேர்ந்தெடுத்து இசைவல்லோரைக்கொண்டு ராகதாளங்கள்



அமைத்துப் பதிப்பித்தல் இளைஞர்களுடைய முயற்சியால் நிறைவேறவேண்டிய சிறந்த தொண்டு.

சைவ இளைஞர்கள் தாங்களும் இசையில் வல்லவர் ஆதல் வேண்டும். வாய்ப்பாட்டில் திறமை பெறுவதோடமையாது, வீணை, பிடில் முதலிய இசைக் கருவிகள் வாசித்தலிலும் திறமை எய்தவேண்டும். இசைக்கருவிகளின் துணைகொண்டு திருமுறைகளை இசையோடு ஓதினால், கேட்போர் இசையில் லயித்துப் பரவசமாவதுமன்றி, திருமுறைகளிலும் சமயத்திலும் பக்தியுடையவர்களாவார்கள். பாமர மக்களிடையே சமய உணர்ச்சி பரவுவதற்கு இசைப்பாடல்கள் மிகச்சிறந்த சாதனம்.

இசைக் கலையைக் குறிப்பிட்டவுடனே பிற அருங்கலைகளும் நினைவுக்கு வருகின்றன. சித்திரம், சிற்பம் என்பனவற்றை இங்கே கூறலாம். நடராஜப் பெருமானுடைய திருவுருவத்திலே அமைந்த ஓவியத் திறனும் சிற்ப நுட்பமும் அக்கலை வல்லோருக்கன்றோ செம்மையாகத் தெரியவரும் ? லண்டன் நகரத்திலுள்ள பிரிட்டிஷ் மியூஸியத்தின் ஓவியப் பகுதிக்குத் தலைவராயிருந்த ரோதன்ஸ்டீன் என்னும் கலைவல்லார் நடராஜ வடிவத்தை மிக வியந்து பாராட்டியிருக்கிறார் : “எல்லாத் தேசங்களிலுமுள்ள கலைச்சிறப்பை ஆராய்ந்தபோது கிரேக்கர்களுடைய ஓவியத்திறனே அதி உன்னத நிலைபெற்றது என்று எனக்குத் தோற்றிற்று. ஆனால், தென்னிந்தியாவிலுள்ள மக்கள் தெய்வமாக வழிபடும் நடராஜ வடிவத்தில் அமைந்துள்ள கலை நுட்பமானது கிரேக்கர் கலைத்திறனிலும் பலமடங்கு மேம்பட்டது” என உளங்குழைந்து கூறியிருக்கிறார். எனவே, நமது இறைவடிவங்களில் பொதிந்துள்ள கலை நுட்பத்தையும் சமய தத்துவத்தையும் நன்கு உணர்வதற்குச் சித்திரம் சிற்பம் முதலிய அருங்கலைகளில் நாம் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டுமென்பது புலனாகிறது. அருங்கலைகளிலே சிறந்த அறிவு பெற்றிருந்தமையால்தான், ரோதன்ஸ்டீன், வேறு நாட்டினராயிருந்தும் வேறு சமயத்தவராயிருந்தும், நமது நடராஜ வடிவத்தின் தத்துவத்தை நன்குணர்ந்து வியந்திருக்கிறார்.

சைவ சமயத்திலே அநாதியாக அமைந்துள்ள சமயப் பொறை என்னும் இயல்பு மிகப் பாராட்டுதற்குரிய ஒரு விசேஷ அம்சம். ஆனால் சமயப்பொறை காரணமாக, சைவ மக்களுக்குச் சமயப் பற்று குறைந்து போய்விடக் கூடாது. சமயப்பொறை என்பது, சொந்த சமயத்தின் பெருமையை நன்றாக உணர்ந்தவர், மற்றச் சமயங்கள் அத்துணைப் பெருமையுடையனவல்ல என்பதை அறிந்து அவற்றைப் பொறுத்தல். அஞ்ஞானத்தாலுண்டாவது பொறையன்று. தன் சமயத்தை அறியாதவன் பிற சமயத்தினிடத்தே பொறை பூண்டு ஒழுகுகிறான் என்பதில் பொருளில்லை. சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அரசியற் குழப்பங்கள் காரணமாக, சைவமக்களிற் சில பகுதியினர் சமயப்பற்றுக் குறைந்துபோய், எம்மதமும் சம்மதமே என்ற கொள்கையுடையோராய் வாழத் தலைப்பட்டனர். பிறமதத்தினரின் துர்ப்போதனையும் சேர்ந்தவுடனே, தாழ்ந்த நிலையிலுள்ள மக்கள் பலர், வேறு பயன்கருதி, தம் சமயத்தை நெகிழ விட்டுப் புறமதம் புகுந்தனர். தங்கள் சமயத்திலே உறுதியான நம்பிக்கையிராமையே இவர்கள் மதமாற்றத்துக்குக் காரணம்; புறமதங்களிலே மேன்மை கண்டு இவர்கள் அவற்றைத் தழுவினார்கள் என்று சொல்ல இடமில்லை. இத்தகைய மதமாற்றங்கள் சைவமக்கட் சமுதாயத்துக்குப் பெருந்தீங்கு விளைப்பன. இவை தம்மிடத்தே மட்டுமன்றி தம்மைச் சார்ந்துள்ள தாழ்ந்த மக்களிடத்தும் எக்காரணம் பற்றியும் நிகழாவாறு சைவப் பெருமக்கள் காக்கவேண்டும். வட இந்தியாவிலே, புறமதம் புகுந்தோரை இந்துமதத்திலே மீட்டும் சேர்த்துக் கொள்ள ஆரிய சமாஜம் போன்ற பல கழகங்கள் சிறந்த முறையில் தொண்டு புரிகின்றன. அங்ஙனமே நமது தமிழ்நாட்டிலும் பல சைவசபைகள் தோன்றி, புறமதம் புகுந்த சகோதரர்களைச் சைவராக்கும் அரிய பணியை மேற்கொள்ள வேண்டும். புறமதம் புகுந்தோர் சைவத்திலே புகுவது இன்றையப் புதுமையன்று; ஞானசம்பந்தப் பெருமான் காலத்திலேயே இந்நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆடம்பரமற்ற முறையிலே, திருவைந்



தெழுத்தையும் திருநீற்றையும் சுத்திசெய்யும் சடங்கிற்குரிய சாதனங்களாகக் கொண்டு, இத்தொண்டை எளிதாகச் செய்யலாம். இத்துறையிலே பல சபைகள் உழைத்து வந்தால்தான் சைவ உலகத்திலே விழிப்பேற்படும். சைவ மக்கள் தொகை பெருகும். இளைஞர்கள் ஊக்கத்தோடு இந்த ஆக்கவேலையில் ஈடுபடுவார்களாக.

சிறு கிராமங்களிலுள்ள புராதனமான சிவாலயங்களிற் பல நல்ல நிலைமையில் இல்லை. காரணம், அங்கே சென்று வழிபடுவோரும் அவற்றைப் பராமரிப்போரும் குறைந்து போனமையே. இடிந்துபோய், புதிதாகத் திருப்பணி செய்ய வேண்டிய நிலையிலுள்ள ஆலயங்களை நான் இங்கே குறிப்பிடவில்லை. கட்டிடங்களைப் பொறுத்தவரையில் பழுது படாத ஸ்திதியிலுள்ளவற்றையே குறிப்பிடுகிறேன். இவைகள், பிராகாரங்களில் முட்செடிகளும் புல்பூண்டுகளும் அடர்ந்து, மனிதர் கால்வைக்க இயலாதபடி சீர்கெட்டுள்ளன. மதிற் சுவர்களில் ஆல், அரசு, வேம்பு முதலிய மரங்கள் வளர்ந்து, உறுதியாக வேர்விட்டு, நாளடைவில் சுவர்களை இடித்துத் தகர்ப்பதற்குத் தயாராய்நிற்கின்றன. ஆலயங்களில் பலபாகங்கள் கவனிப்பாரற்று, வௌவால்களுக்கும், எலி பெருச்சாளிகளுக்கும் நிரந்தர வாசஸ்தானங்களாகி யிருக்கின்றன. கிராமங்களிலுள்ள இளைஞர்கள் தினமும் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுசெய்வதை ஒரு நியதியாகக் கொள்வார்களாயின், இந்தக் குறைகளை நேரில்கண்டு அவைகளைத் தீர்க்க முற்படுவர்.

பழைய ஆலயங்களிலே சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய பல சாசனங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுட் பல சிலாசாசன பரிசோதகர்களால் பிரதி செய்யப்பட்டவை; சில பிரதி செய்யப்படாதவை. இவற்றின் அருமை தெரியாமல், கோயில் திருப்பணி செய்வோரும் பிறரும் இவற்றின்மேல் சுண்ணாம்படிப்பதனாலும், வர்ணம் பூசுவதனாலும், சாசனம் பொறித்த கற்களைப் பெயர்த்து வேறு பணிகளுக்கு உபயோகிப்பதனாலும் இச்சாசனங்களைக் கெடுத்துவிடுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க செயல்.

சாசனங்களைப் போற்றிப் பாதுகாக்கவேண்டியது எத்துணை அவசியமானது என்பதை நீங்கள் நன்குணர்வீர்கள். இவை மேலும் அழியாதபடிப் பாதுகாத்து, வெளிவாராத சாசனங்கள் வெளிப்படுதற்கு வேண்டிய முயற்சி எடுத்தல் உங்கள் கடமை. இவ்வகைத் தொண்டினால் ஆலயங்களின் பெருமையும், சமயத்தின் ஏற்றமும், சரித்திர நிகழ்ச்சிகளும் விளக்கம் பெறும்.

ஆலய வழிபாட்டு முறைகளிலே திருத்தம் செய்ய வேண்டும் என்று பலரும் சொல்லி வருகிறார்கள். திருத்தத்தில் ஊக்கமுள்ளோர் வழிபாட்டில் கலந்து கொண்டு, முறையாக ஆலயங்களுக்குச் சென்று வருவாராயின், காலக்கிரமத்தில் தக்க திருத்தங்கள் இடம்பெற்று விடும். நம் மக்கள் எந்தத் திருத்தத்தையும் வெறுப்பவர்கள் என்று சொல்வது உண்மையே. ஆயினும், நமது சைவ சமயத்தைப்போல மாறுபாடுகளுக்கு இடங்கொடுக்கும் சமயம் வேறொன்றில்லை. வழிபாட்டு நெறிக்குப் புறம்பே நின்று 'திருந்து, திருந்து' என்று சொல்வதால் பயன் விளையாது. திருத்தம் விழைபவர் மக்கள் மனம் புண்படாத வகையில் நல்ல முறையிலே முயல்வார்களாயின், இன்றையச் சமய வழிபாட்டு முறையிலுள்ள குறைகள் பலவற்றையும் எளிதில் நீக்கலாம்.

கோவிலுக்குச் செல்லும்போதும் சட்டை முதலிய உடைகள் அணிந்து செல்வது இக்காலத்து வழக்காயிருக்கிறது. உடலை மூட உபயோகிக்கும் சட்டையானது உயிரையும் உயிர்க்குயிரான கடவுளையும் ஒருங்கே மறைத்து விடுகிறது. உண்மையான பக்தியும் பரவசமும் நான் என்ற ஆணவ முனைப்பு இழந்த மாத்திரத்திலேதான் வரும். ஆடம்பர உடுப்புகள் இந்த ஆணவ முனைப்பு தடித்து நிற்க உதவி செய்கின்றன. ஆண்டவன் திருமுன்னர் தன்னையிழந்து அகங்குழைந்து மெய்ம்மறந்து நிற்க இவை இடையூறுகளே.

இறைவன் சந்நிதியிலும் கோபுர வாயிலிலும் சகல உறுப்புக்களும் மண்ணிலே தோயும்படி வீழ்ந்து நமஸ்கரிப்பது நமது சமய வழிபாட்டிலே ஒரு சிறந்த அம்சம். நமஸ்



கரிப்பதனால் பணிவு பிறக்கும். நான் என்ற பசு உணர்ச்சி கெடுவதற்கும் பதியுணர்ச்சி பிறப்பதற்கும் இதுவே முதற்படி. தற்கால நாகரிகத்தின் விளைவாக, ஆங்கிலம் படித்த இளைஞரிடத்தே நமஸ்கரிப்பதுபோன்ற சரியைகள் அருகி வருகின்றன. இது மிகவும் வருந்தத்தக்கது. ஆன்மா தன்னுடைய செயல்களனைத்தையும் நீத்து, புலன்களின் வழித்தான் செல்வதை ஒடுக்கி, இறைவனுடைய திருவடிகளிலே சரணடைந்தால், ஆன்மாவினிடத்திலே இறைவனது திருவருள் பிரகாசிக்கும் என்பதை நமஸ்கரித்தல் போன்ற செயல்கள் ஒருவாறு சுட்டிக் காட்டுகின்றன.

அநுபவமொன்றினாலேயே இளைஞருக்குச் சமயப் பற்று அதிகரிக்கும். திருநீறணிவது, விழாக்களிலே கலந்து கொண்டு பரம்பொருளின் குணவிசேஷங்களிலே மனத்தை ஈடுபடுத்துவது, நாயன்மார் முதலிய சமயப் பெரியார் குருபூசைகளைச் சிறப்பாகக் கொண்டாடுவது, நந்தவனம் அமைத்துப் பராமரிப்பது முதலிய தொண்டுகளால் மனம் பக்குவமடையும்.

பொதுவாக, சமயம் ஆடவர் சமயமாகவே இருக்கிறது. கடவுளுக்கும் கடவுளை அறிய வழி காட்டும் சமயத்துக்கும் ஆடவர் பெண்டிரென்ற வித்தியாசம் கிடையாது. பல சமயக் குழப்பங்களிடையிலும் அரசியற் குழப்பங்களிடையிலும் நமது சமயம் பண்டைப் பெருமை குறையாமலிருப்பதன் முக்கிய காரணம் பெண் மக்களுக்குள்ள சமயப் பற்றேயாகும். இதைப் பல வழிகளிலும் பெருகச் செய்ய இளைஞர்கள் முயல்வார்களாக.

பெருந்தொகையினரான சைவ மக்கட் தொகுதியிலே, ஏதோ நானூறு பேர்தான் சமாஜ அங்கத்தினர் என்று சொல்வது நமக்கெல்லாம் வருத்தந் தரக்கூடியது. இலட்சம் பேர் அங்கத்தினர் என்றால்தான் நமக்குச் சிறிது திருப்தி பிறக்கும். சமாஜத்தின் ஆக்கம் ஒன்றே சைவ மக்களுடைய ஆக்கம். ஆகவே இங்கே கூடியுள்ள இளைஞர் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவுக்குப் பிற சைவர்கள்

அனைவரையும் சமாஜ அங்கத்தினராகச் சேர்க்க முயல வேண்டும்.

சைவ சமயமும் சைவ மக்களும் ஆக்கம் பெறும் பொருட்டு இளைஞர்கள் மேற்கொள்ளக்கூடிய இரண்டொரு தொண்டுகளை இங்கே குறிப்பிட்டேன். இவை நம்மவருக்கு உகந்தனவாகவே இருக்குமென்று கருதுகிறேன்.

இறுதியாக, அஞ்ஞானமாகிய குன்றத்தை எறிந்து, பிறவியாகிய பெருங்கடலை நீந்தத் தன்பேரருளைத்தந்து, இந்த 'மயிலந்தண்மாமலையே' தன் திருப்படைவீடாகக் கொண்டு வீற்றிருக்கிற, என்றும் இளையவனாகிய, முருகப் பெருமானை வேண்டுவதொன்று உண்டு. இறைவன் எல்லா உயிர்களிடத்தும் உயிர்க் குயிராய் உறைகிறான் என்ற உண்மையைப் பெரியோர்களும் அறிவுறுத்தியிருக்கிறார்கள்; சமய நூல்களும் போதிக்கின்றன. நாமும் இறைவனை வழிபடும்போது இக்கருத்துக்களமைந்த பாடல்களைப் பாடித் துதிக்கிறோம். ஆனால், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுகின்றோமா என்பது சந்தேகந்தான். இறைவன் நம்மிடத்திலே என்றும் உறைகின்றான்; நம் செயலென்ப தொன்றில்லை; நமக்குள்ளேயே அவன் எழுந்தருளியிருந்து நம்மைத் தொழிற்படுத்துகிறான் என்பதை உணர்ந்து நாம் அவனை வணங்க வேண்டும். 'முருகப் பெருமானே! நீ என்னுள்ளே உறைவதை நான் உணரும்படியாக என்னுள்ளத்திலே நீ வீற்றிருப்பாயாக!' என்று நக்கீரதேவர் வேண்டுகிறார். அவ்வேண்டுகோளையே நானும் இங்கு முருகப்பெருமானுக்குச் செய்துகொண்டு எனது உரையை முடிக்கிறேன்.

"குன்றம் எறிந்தாய்! குரைகடலிற் சூர்தடிந்தாய்!
புன்தலைய பூதப் பொருபடையாய்! - என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய் என் உள்ளத்(து) உறை."

189764

உ
குகமயம்

# சைவ சித்தாந்த மகா சமாஜம்
## 35-வது ஆண்டு நிறைவு விழா, மயிலம்
# ஆசிமொழி
### (ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்)

பூவாய் நெடுங்கோட் டுறுபசுந் தேன்கைகான் முடங்கு பொறியிலித
லூவா யொழுகிற் றெனவுலக மளந்த மாலு நான்முகனுங்
காவா யெனநின் றேத்தெடுப்பத் தானே யுவந்தெங் கரதலத்தின்
மேவா வமர்ந்த மாமணியைத் தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்.

### தோற்றுவாய்

தமிழ் மக்கள் கொண்டொழுகிய ஒழுக்கம் இரண்டு. அவை அகத்திணை ஒழுக்கம், புறத்திணை ஒழுக்கம் என்பன. அகத்திணை ஒழுக்கம் இன்பம் பற்றியது. புறத்திணை ஒழுக்கம் அறம் பொருள் பற்றியது. புறத்திணை ஒழுக்கங்களுள் வாகைத்திணை என்பதொன்று. வாகைத் திணையாவது,

"தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப" [தொல்-பொ-பு. கக]

"கேடில்லாத கோட்பாட்டினையுடை தத்தமக்குள்ள இயல்பை, பாகுபாடுதோன்ற மிகுதிப்படுத்தல்" என்பர் தொல்காப்பியர். அவ்வாகைத்திணை இரண்டு வகையினையுடையது. ஒன்று மறம் பற்றியது. மற்றொன்று அறம் பற்றியது.

### அவையின் பெருமை

அறம்பற்றிய வகையில் "எட்டுவகை நுதலிய அவையம்" என்பது ஒரு துறை. இதற்கு "எண்வகைக் குணத்தினைக் கருதிய அவையத்தாரது நிலைமை" என்பது பொருள்.

அவையத்தாரது எண்குணமாவன. குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை என்பனவாம். "எட்டின் வழிபடர்

தல் வல்லதவை" என்றார் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர்.

“குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையின்
காதலின் பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாவின்மை யென்றாந்
திருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மரீஇ யிருக்கை யொருநாள் பெறுமெனிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே”

“குடிப்பிறப்பாகிய ஆடையை யுடுத்துக், கல்வியாகிய மலரைச்சூடி, ஒழுக்கமாகிய அணியைப்பூண்டு, வாய்மையாகிய உணவை உண்டு, தூய்மையாகிய காதலியின் இன்பத்தில் தாழ்ந்து, நடுவு நிலையாகிய நெடிய மனையிலே தங்கி, அழுக்காறின்மை அவாவின்மையாகிய இருபெரு நிதியுங்களை ஒருவராய் ஈட்டும் தோல்வியடையாத நாவைப் பெற்றிருக்கும் மேலோர் எழுந்தருளியுள்ள பேரவை; அப்பேரவையுடன் பொருந்தியிருத்தலை ஒருநாட் பெறுவோமாயின்; தோன்றும் பொழுதெல்லாம் ஊன்பொதிந்து, நின்றபொழுதெல்லாம் ஒருதன்மையில் நில்லாது, நிலையழியும் யாக்கை பொருந்த இவ்வுலகத்துச் சுழலும் பிறப்பை யாம் பெறமாட்டோம்" என்றார் ஆசிரியமாலையார்.

இதுவரைத் தோலா நாவின் மேலோர் பேரவையின் பண்புகளையும், அப்பேரவையினால் அன்பர்கள் பெறும் பயனையும் ஆராய்ந்து அறிந்து கொண்டோம்.

## சைவ அன்பர் கூட்டம்

வெட்சி முதலிய போர்த்திணைகளுக்கு வாகைத்திணை முடிபாய் அமைந்துள்ளது. அதுபோல, மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்தில் பிரமாணஇயல் முதலானவைகளுக்குப் பயனியல் முடிபாயுள்ளது. அப்பயனியலின் கடைசிச் சூத்திரம்



“செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே”

“அயரா அன்பின் அரன் கழலணைந்த சிவன், செங்கமல மலர்போலவிரிந்துவிளங்கிய முதல்வனது நோன்றாளை அணையவொட்டாது அயர்த்தலைச் செய்விக்கும், அவ்வியல்பினையுடைய மும்மல அழுக்கை, ஞானநீராற் கழுவி, சிவபத்தர்களோடு கலந்துகூடி, மலமயக்கம் நீங்குதலான் அன்புமிக்க அவரது திருவேடத்தையும், திருக்கோயிலையும் அரனெனவே கண்டு வழிபட்டுவாழும்" என்று கூறுகின்றது. இதனுள் அரன்கழலணைந்த சிவன் சிவபத்தர் கூட்டத்தில் கூடவேண்டும் என்று மெய்கண்டார் கூறுகின்றார். மாணிக்கவாசகப்பெருமானும், “அடியேன் உன்; அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப்புரியாய்" என்றும், “நெருங்கு மடியார்களுநீயு நின்று நிலாவி விளையாடும்; மருங்கே சார்ந்து வர வெங்கள் வாழ்வே வா வென்றருளாயே" என்றும் கூறுகின்றார்.

பகையைக்கொன்று வாகை சூடுவது போல, மும்மல அழுக்கை ஞான நீராற் கழுவிய பின்னர் சிவபக்தருடன் கூடவேண்டும். இங்ஙனம், சிவபக்தருடன் இணங்குக எனவே, ஏனையோருடன் இணங்கற்க என்பதும் பெறப்பட்டது. அற்றேல், உறவும் பகையுங் கருதாது, எல்லாவுயிரையும் ஒக்கப்பார்க்கும் நடுவுநிலை கடந்து சிலர் மாட்டு விருப்பும், சிலர் மாட்டு வெறுப்பும் செய்து கொண்டு வேறுபட்டு நிற்றல் சிவன் முத்தர்க்குத் தகுதியோ வெனின்? அல்லாதாரொடு கூடின் அவர் அறியாமையை உணர்த்துவாராகலான், சிவன் முத்தர் அவர்களுடன் இணங்கி வாழ்தல் தக்க தன்றாம். மாணிக்கவாசகரும் அரசியல் நண்பராலும் அயலாராலும், சுற்றத்தாராலும், வேதியராலும், வேற்றுச் சமய வாதிகளாலும் தம் சிவ பத்திக்கு இடையூறு விளைந்

ததைப் போற்றித் திருவகவலில் அழகாகக் கூறியிருக்கின்றனர். மெய்கண்டாரும் சிவபத்தியில்லாதார் மாட்டும் சிவபத்தி உள்ளார் மாட்டும் கூடுவதனாலுண்டாகும் பயனைக் கீழ்வரும் வெண்பாவால் கூறுகின்றார்.

“ மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குந்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை - அறப்பித்துப்
பத்தரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை ”

“இறைவன் திருவடியை மறப்பித்துப் பிறவிக்குழியில்வீழ்ந்து துயருறச்செய்யும் அன்பில்லார் கூற்றிலே சேரும் சேர்ச்சியை அறும்படிசெய்து, சிவபத்தர் கூற்றிலே பேரன்புடையராய்ச் சேர்ந்து, சிவஞானக்கண்ணால் அந்நிலை சிறந்ததெனக் கடைப்பிடித்து, உணரப் பெற்றவரை பிராரத்தவினை வாதியா”.எனவே,சைவப்பெருமக்களுக்கு இன்றியமையாத அன்பர் கூட்டம் இங்கே கூடியிருக்கிறது. செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇய அன்பர்களெல்லாம்,

“ ஆசை யொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கரும மாகச் செய்து
கூசிமொழிந் தருண்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே ”

என்ற சித்தியார் மொழிப்படித், தற்போதமற்ற அருண்ஞானத்தில்நின்று, அன்பர்பணியே தம்பணியாகக்கொண்டு தொண்டாற்றிக் களித்தனர். அத்தகைய அன்பர்களுக்கு மயிலவரையிலெழுந்தருளியுள்ள திருமுருகப்பெருமான் திருவருட்டுணைகொண்டும், எங்கள் பீடத்தின் முதற் குரவனாகிய ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் திருவருட்டுணை கொண்டும் சில குறிப்பிட எண்ணுகின்றோம். அன்பர்களே ! மும்மலங் கழுவி, அன்பரொடு பொருந்தியிருக்கும் இவ்விரண்டு செயல்கள் மட்டும்போதா. இன்னும் அடியாரது திருவேடத்தையும், அருட்குறி எழுந்தருளியுள்ள திருக்கோயிலையும் அரன் என்று எண்ணி வழிபட வேண்டும். மெய்கண்டார் இதையே முடிந்த பயனாய்க் கூறுகிறார். அன்பர்களெல்லாம் அடியாரையும், அருட்குறியையும் அரனென்று போற்று



கின்றார்கள். ஆனால், மெய்கண்டாரோ, “வேடமும் ஆலயந் தானும் அரனெனத் தொழுமே” என்கின்றார்.

## திருவேடம்

திரைசெய் நீர்ச்சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்த மெய்ப்பொருள் நாயனாரின் முடிவான மொழி “ விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீர் ” என்பதல்லவா ? திருக்காளத்தி நாதனைத் தரிசிக்க எண்ணிய இரண்டு கன்னியர்கள் சிவவேடங்கொண்ட கள்வரை உண்மையாய் நம்பினார்கள் ; அதனால் அவர்களுக்குக் கிடைத்தது உண்மையாகிய வீடாம். காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை, சாந்து, முதலாயின காமுகரை வசீகரித்து இன்பம் செய்கின்றன. அதுபோல கண்டிகை, வெண்ணீறு முதலிய திருவேடப் பொருள்களும் மெய்யுணர்வுடையாரை வசீகரித்து இன்பம் செய்கின்றன.

“ சேலுங் கயலுந் திளைக்குங்கண்
ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப ”

என்றார் சேந்தனார். இத்திருவேடப் பொருள்களால் வரும் பயனைச் சீகாளத்திப் புராணம் கன்னியர்ச் சருக்கத்தில் வேலைய சுவாமிகள்,

“ ஆயிரங் கலனுடம் பனைத்துந் தாங்கினும்
மாயிரும் பொறையலால் வருவ துண்டுகொல் ?
நாயகன் விழிமணி யொன்றோர் நாளுடன்
மீயணிந் திடில்வினை யாவும் வீயுமே ”

“ புழுகுசெஞ் சாந்திவை புனைந்து புன்மலம்
ஒழுகுமொன் பான்றுளை யுடம்பை யொன்றுநீ
அழகுசெய் திடின்மல மகலுமோ ? பரன்
முழுகுவெண் ணீறிடின் முற்று மாயுமே ”

என்று கூறுகின்றார். எனவே சிவபத்தரின் குணஞ் செயல் முதலானவைகளை முதன்மையாய்க் கருதாமல் சிவவேடத்தையே முதன்மையாய்க் கருதினால் இறைவன் திருவடி நீழலுக்கு அன்பர்கள் உரியராவர்.

## திருக்கோயில்

எண்டோளீசற்கு எழுபது சுதைமாடஞ் செய்தான் கோச்செங்கட் சோழன், அவனுடைய வழித்தோன்றல்கள் நூற்றுக்கணக்கான, திருக்கோயிலை உண்டாக்கினர். பல்லவ மன்னரும் பிறரும் பல திருக்கோயிலை உண்டாக்கினர். இத்திருக்கோயில்களெல்லாம் பண்டு அரணைப்போலவே விளங்கித் தமிழகத்தைக் கடவுளகமாக்கின. தமிழ் மக்கள் கோயிலில்லா ஊரில் குடியிருக்க விரும்பிலர். வேடம் சிவபத்தரை அறிதற்குக் குறியாயிருக்கின்றது. திருக்கோயில் இறைவனுண்டென்பதை அறியக் குறியாயிருக்கின்றது. எல்லா மக்களுக்கும் பத்தி பிறப்பதற் கிடமாயுள்ளவை திருக்கோயில்களே. ஆனால் இப்பொழுது திருக்கோயில்களின் நிலை கேவலமாயுள்ளது. அதற்குக் காரணம் திருக்கோயிலை அரன் என்று கருதிப் பணிபுரியும் மக்கள் மிகஇல்லாமையேயாகும். எத்தனையோ திருக்கோயில்கள் சிறப்பும், நாள் வழிபாடுமின்றி இடிந்தும் பாழடைந்துங் கிடக்கின்றன. நிபந்தங்களெல்லாம் தன்னலமுடையார் கைக்கொண்டனர்.

“ முன்னவ னார்கோயில் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
யென்னரு நந்தி யெடுத்துரைத் தானே ”

என்று கூறுகின்றார் திருமூலனார். போனதுபோக எஞ்சியவற்றைப் போற்ற அரசியலார் “ அறநிலைக் குழுவினரை ” ஏற்படுத்தியுள்ளனர். இச்செயல் பாராட்டத் தக்கதே என்றாலும், சிலபொழுதில் முதற்றரமான நாத்திகர் இக்குழுவில் இடம் பெற்றுவிடுகின்றனர். இந்நாத்திகர் கையில் திருக்கோயில்கள் படும்பாடு சொல்லத்தக்கதன்று. அறநிலைக் குழுவினராய் வருபவர் ஆத்திகராய், ஆத்திகநூல்களை எல்லாங் கற்றிருக்கவேண்டும். வெறும் ஆங்கிலக் கல்வி மட்டும் பயன்படாது. திருவாளர்கள் - திவான்பகதூர். T. M. நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள், இராவ்பகதூர். C. M. இராமச்சந்திர செட்டியார், பி. ஏ., பி. எல். அவர்கள், A. S. மண்ணடி நாயர் (*Bar-at-law*)



அவர்கள், P. காமேஸ்வர ராவ், எம். ஏ., பி. எல். அவர்கள் காலத்தில் சமயத் தொண்டும் திருக்கோயில் திருப்பணியும் நன்கு நடக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அதற்குச் சான்றாகவே சைவசித்தாந்த சமாஜத்தில் அவர்கள் கலந்துகொண்டு அதைத் திறந்தும் அதில் தலைமை தாங்கியும் நடாத்துகின்றார்கள். என்றாலும், அவர்களுக்குப் பின்வருபவர்களெல்லாம் சிறந்த ஆத்திகராயிருக்க வேண்டும். அக்கொள்கையை அரசியலார் மிகஎண்ணும்படி அன்பர் கூட்டம் கிளர்ச்சி செய்யவேண்டும்.

## கழகம்

அதுவுமன்றி, ஒவ்வொரு திருக்கோயில்களிலும் சைவ அன்பர் கழகம் தோற்றவேண்டும். அக்கழகம் சைவ சித்தாந்த மகாசமாஜத்துடன் இணைந்ததாயிருத்தல் மிக நல்லது. சமாஜம் நாடெங்கும் கிளைக் கழகத்தைத் துணையாகப் பெற்றால் அரியபெரிய செயல்களைச் செய்யும் அன்பர்கள், அன்பர்பணியைச் சைவஅன்பர் கழகத்தின் உதவியால் செய்யலாம். இங்ஙனம் திருக்கோயிலும் திருத்தொண்டர் கூட்டமும் ஒன்றுசேர்ந்தால் “ பாலும் சருக்கரையுங் கலந்தாற்போ”லாகாதா ? கிறித்துவர் கோயில்களில் அவ்வன்பர்கள் கூட்டங்கூடிப் பணிசெய்வதை நீங்கள் காணவில்லையா ?

## சைவ சித்தாந்தக் கல்லூரி

அது நிற்க, சைவ சித்தாந்த நூற்பயிற்சி மிகக் கடினமானது. அக்கல்வியை ஆண்பாலரும், பெண்பாலரும் ஆகிய சைவமக்கள் எல்லாரும் பெறல்வேண்டும். இதற்கான செயலை அன்பர்கள் தொடங்கவேண்டும். சமாசத்தார் சைவ சித்தாந்தச் சுவடிகளை எளிய விலைக்குக் கிடைக்கும்படி அச்சிட்டுக் கொடுக்கிறார்கள். அம்முயற்சி பாராட்டத் தக்கது. ஆனால், சைவ சித்தாந்தக் கல்லூரிகளும் ஏற்படவேண்டும். இது முக்கியம்.

## நம் நாட்டுச் செல்வர்

வேற்று நாட்டினர் கோடிக்கணக்கான செல்வத்தைச் சமய முன்னேற்றத்திற்குச் செலவு செய்கின்றார்களே. நம்

நாட்டுச் செல்வரும் அங்ஙனம் செலவுசெய்தால் சமயப்பயிர் நன்றாய்ச் செழிக்குமே. ஆனால் நம் நாட்டுச் செல்வர்கள் சமயப்பயிரை வளர்க்காவிட்டாலும், தங்களுக்குள்ள செல்வ. இறுமாப்பால் சமயத்தை இகழ்ந்தாவது பேசாமலிருப்பார் களா ? தங்கள் ஒழுங்கற்ற நடைக்குச் சமயச் சட்டங்கள் இடையூறாயிருப்பதை உள்வைத்துக்கொண்டு போலிக் கார ணத்தால் சமயத்தைக் கண்டிக்கப் புகுகின்றனர். இவர் களுக்கு இறுமாப்புக் கொடுத்துத் தீங்கில் ஊக்கிய செல்வம் நாளை போய்விடும். அச்செல்வத்தால் நல்லறம் செய்து கொண்டாலோ, அச்செல்வம் கழிந்தாலும் நல்வினை நிற்கும். இவைகளைக் குறித்துச் சிந்தாமணி யாசிரியரும்,

*"முல்லை முகைசொரிந்தாற் போன்றினியபா லடிசில் மகளிரேந்த*
*நல்ல கருணையால் நாள்வாயும் பொற்கலத்து நயந்துண் டார்கள்*
*அல்ல லடைய வடகிடுமின் ஓட்டகத்தென் றயில்வார்க் கண்டும்*
*செல்வம் நமரங்காள் ! நினையன்மின் செய்தவமே நினைமின் கண்டீர்"*

என்றார்.

## முடிப்புரை

ஆகையினால், பேரன்பர்களே ! நீங்கள் மெய்கண்டார் கூறியபடி மும்மலங்களையும் கழுவுங்கள். சைவ அன்பர்கள் கூட்டத்தில் கூடுங்கள். அவர்கள் திருவேடத்தையும் திருக் கோயிலையும் அரன் என்றெண்ணிப் போற்றுங்கள். விரிந்த சமயத் தொண்டையும் மேற் கொள்ளுங்கள். உங்கள் திருத்தொண்டின் உறைப்பினால் எல்லா இடையூறுகளும் நீங் கப் பெற்று, முடிவான பயனைப் பெறுவீர்கள். இச்சைவ சித்தாந்த சமாசத்தை இங்கு வந்திருந்து நடத்துகின்ற நீங்க ளெல்லாம் இன்பமுற்று வாழும்படி எங்கள் திருமுருகப் பெருமானையும் முதற்குருநாதனையும் வேண்டுகின்றோம். சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.

*"வைய நீடுக மாமழை மன்னுக*
*மெய் விரும்பிய அன்பர் விளங்குக*
*சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக*
*தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே."*



மயிலத்தில் நமது சமாஜ விழாவை நடத்தி வைத்த
**ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**

உ

# தமிழ் இலக்கிய மகாநாடு, மதுரை

**(18, 19—1—1941)**

சென்னை ஸர்வ கலாசாலைத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்

**ராவ்சாகிப் - எஸ். வையாபுரிப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.,**

# தலைமையுரை

*தெள்ளு சுவைதேர்ந்து தேர்ந்து புலவோர்கள்*
*அள்ளி யளித்த அருந்தமிழின் - ஒள்ளியசீர்*
*சாற்றுக என்வாய் தழைந்து தழைந்தென்றும்*
*போற்றுகஎன் நெஞ்சம் புரிந்து.*

*தமிழ் இலக்கிய மகாநாட்டின் வரவேற்புக் கழகத்துத் தலைவரவர்களே, தமிழ் அறிஞர்களே, தமிழ்ச் செல்வர்களே, தமிழ்ச் செல்வியர்களே !*

இம்மகாநாடு தமிழ்க் கல்வியாளர்களின் பிரதிநிதிகள் பலருங் கூடியுள்ள ஒரு பெருங்கூட்டம். இதற்குத் தலைவராக இருத்தற்குத் தகுதியுடையவராய்த் தமிழ்க் கல்வி கேள்விகளிற் சிறந்தோராயுள்ளோர் பலரிருப்பவும், என்னை அப்பதவிக்குத் தேர்ந்தெடுத்தது யாது காரணம்பற்றியென என்னால் அறியக்கூடவில்லை. நிர்வாகக் குழுவினர் கண்ட காரணம் யாதாயிருப்பினும் இருக்க ; நான் அவர்களிடத்து மிக்க நன்றியுடையனாதற்குத் தக்க காரணம் உண்டு. அவர்கள் அளித்துள்ள இத்தலைமைப் பதவி கிடைத்தற்கரிய தொன்றாகும். என் வாழ்வில் இதனைப் பெரும் பேறெனவே கொண்டு மகிழ்கிறேன். எனது தேக நிலையை முன்னிட்டு என்னை மன்னிக்கும்படியாக நான் வேண்டியும், என்னை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி என்னை இணங்கும்படிச் செய்த வரவேற்புக் கழகத் தலைவரவர்களுக்கும் காரியதரிசி



யவர்களுக்கும் பிற நண்பர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றி உரித்தாகிறது. அவர்களுடைய அன்பை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அன்பர்களே, இப்பொழுதுதான் இம் மகாநாடு முதன் முறையாகக் கூடுகிறது. இவ்வகையான ஓர் மகாநாட்டிற்கு அவசியமுண்டாவென்று சிலர் ஐயங்கொள்ளலாம். அவசியம் உண்டென்றே எனக்குத் தோன்றுகிறது. தமிழ் நாட்டிலே மிக்க புகழ்பெற்று விளங்குவன மூன்று பெருங்கழகங்களாகும். ஒன்று, இம்மதுரைப் பெருநகரிலே 1901-ம் வருஷத்திலே ஸ்ரீ பாண்டித்துரைத்தேவரவர்களால் நிறுவப்பெற்று இன்றுகாறும் செவ்வனே நடைபெற்று வருகிற மதுரைத் தமிழ்ச் சங்கமாகும். இரண்டாவது, சென்னையில் 1905-ம் ஆண்டில் ஸ்ரீ. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை முதலியோரால் நிறுவப்பெற்றுப் பலவகையானும் விரிவடைந்து மிக்க ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் நடத்தப்பட்டு வருகிற சைவசித்தாந்த மகா சமாஜம் ஆகும். மூன்றாவது, தஞ்சையை யடுத்த கருந்திட்டாங்குடியில் 1913-ம் வருஷத்தில் தோன்றி மிக்க தமிழார்வத்துடன் நடத்தப்பெற்றுவருகிற கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும். இவற்றுள் இரண்டாவதாகக் குறிப்பிட்ட சமாஜம், தமிழ் இலக்கியத் துறையிலும் பேருழைப்பெடுத்துப் பெருந்தொண்டு புரிந்து வருகிறதெனினும், முதன்மையாகச் சமயச்சார்பு பற்றியதாகும். ஏனைய இரண்டு சங்கங்களும் தமிழின்பொருட்டே நிறுவப்பெற்றனவெனினும், பொருள் முட்டுப்பாடு முதலிய பலவகைக் காரணங்களால், குறிப்பிட்ட சிற்சில தமிழ்த் துறைகளில் மாத்திரம் உழைத்து வருகின்றன. உதாரணமாக, தமிழ்க்கலாசாலை நடத்துதல், பத்திரிகை வெளியீடு, அச்சில் வாராத பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தல் முதலிய தொண்டுகளை இவை ஆற்றி வருகின்றன. இவையெல்லாம் பழமையைப் போற்றுகிற அளவிலே நின்றுவிடுகின்றன. பழைய மரபைக் கைவிடாது அதனோடு தொடர்பு கொண்டு புதிய புதிய துறைகளில் புத்துணர்ச்சியோடு தமிழிலக்கிய வளர்ச்சியைப் பேணுதல் மிக அவசியமாகும். இப்புதிய துறையைப் பிரசாரம் செய்வதற்

கும், அதன்கண் உழைத்து வருவதற்கும் இப்புதிய மகாநாடு வேண்டற்பாலதே யாகும்.

தமிழ் மொழிச் சரிதத்தோடும், தமிழ் இலக்கியச் சரிதத்தோடும் மதுரை மூதூரின் சரிதம் பின்னிக்கிடக்கிறது. தொல்காப்பியனார் காலத்துத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு எல்லை வடவேங்கடம் தென்குமரி என்பர். இப் பரந்துபட்ட பிரதேச முழுவதும் பேசப்பட்ட தமிழ்மொழி- இடம், சமயம், மக்கள்வகுப்பு முதலிய வேறுபாடுகளால் பாதிக்கப்படாது - எங்கும் ஒரே நிலையில், ஒரே முறையில், உச்சாரணபேதஞ் சிறிதுமின்றி வழங்கிவந்ததென்று ஒருவருங் கூறத்துணியார். இப்பேச்சுவழக்கு நூல்வழக்காக மாறும்பொழுது, குறிப்பிட்ட ஓரிடத்து வழங்கும் மொழியே பிரசாரமெய்திப் பொதுப்பட அங்கீகரிக்கப்பட்டு அவ்வகை மொழியில் நூல்கள் பெருகும். மதுரைப் பிரதேசத்தில் வழங்கி வந்த மொழியே இங்ஙனம் பிரசாரமெய்தி அங்கீகாரம் பெற்று நூல்களின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தது. இப்பெருமைக்குக் காரணங்களும் பலவுள. முதலாவது அப்புராதன காலத்திலே மதுரை மாநகர் பெருஞ் சிறப்புற்று விளங்கிற்று; அக்காலத்துத் தமிழ்-நாகரிகத்திற்கு லக்ஷ்ய பூமியாயிருந்தது; அகநாட்டு வாணிபமும் புறநாட்டு வாணிபமும் மிக்க ஊக்கத்துடன் நடைபெற்று வந்தன; பல தேசத்து மக்களின் கூட்டுறவினாலே மதுரை நகரத்து மக்களின் வாழ்வு நிறைவெய்தி இனிது ஒழுகியது; கல்வி சிறந்தோங்கிற்று; தமிழாசிரியர் மிகப் பலர் தோன்றினார்கள்; அவர்களை ஆதரித்து அவர்களியற்றிய செய்யுட்களைப் போற்றுதற்கு மதுரையில் ஆண்ட பாண்டிய பரம்பரை பெருவிருப்புற்று முன்வந்தது. இந்நிலையில் மதுரை மூதூரில் தமிழ் செழித்துவளர்ந்தமை சிறிதும் ஆச்சரியமன்று. அங்கே தோன்றிய நூல்களின் தமிழே அங்கீகாரத்திற்குரியதெனக் கொள்ளப்பட்டது. மற்றைப் பிரதேசங்களிலுள்ள புலவர்களும் இம்மதுரைத் தமிழைப் பின்பற்றியே பாடினர். ஆகவே, மதுரைப் பிரதேசத்துத் தமிழே 'செந்தமிழ்' (Standard Tamil) ஆயிற்று. இதனால் இப்பிரதேசம்



'தமிழ் நாடு' (பெரியபுரா - திருஞா - 652) என வழங்கலாயிற்று. செந்தமிழ் நிலமாவது யாதெனின்,

" சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப"

என்றனர் சங்கரநமசிவாயப் புலவர். பரஞ்சோதி முனிவரும்,

" ... ... ...தென்சொல்
மடமகட்கரங் கென்பது வழுதிநா டன்றோ"

என்று புகழ்ந்தேத்தினர். இவர்களைக் கூறுவான் என்? இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த புலவர்களுங்கூட இக்கருத்துப்படவே பாடுகின்றனர்:

" தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

189764

என்பது சிறுபாணாற்றுப்படை;

" தமிழ்கெழு கூடல்"

என்பது புறநானூறு (58). இங்ஙனமாகத் தமிழ்மொழிச் சரிதத்தோடு இம் மதுரைநகரின் சரிதம் பிணைந்து கிடக்கின்றமை காணலாம்.

மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாட்டிலே பொதிய மலையிலே, என்றுமுள தென்றமிழ் இயம்பி யிசை கொண்டவராகிய அகத்திய முனிவர் வாழ்கின்றார் என்பது நம்மவர் நம்பிக்கை. இம்முனிவர்க்கு மாதொருபாகன் ஆதியிற்றமிழ் நூல் உணர்த்தினர் என்பர். முதன் முதலில் தமிழ்ச் செய்யுட்களையும் தமிழ் நூல்களையும் ஆராய்ந்த இடம் மதுரை யென்பது தலைச்சங்கம் இங்கே கூடியதென்னும் வரலாற்றால் உணரப்படும். திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், முருகவேள், அகத்தியனார் முதலியோர் இத் தலைச்சங்கத்தில் தமிழ் ஆராய்ந்தார் என்று கூறுவர்.

இப்பௌராணிக வரலாறு தமிழிலக்கியத்தின் தொன்மையினையும் மதுரையின் தொன்மையினையும் நன்கு உணர்த்துகிறது. கடல்கொண்ட கபாடபுரத்துக் கூடியதாகக் கூறும் இடைச்சங்கத்தை விடுத்து, கடைச்சங்கத்தை நோக்குவோமாயின், அதுவும் கூடிய இடம் இம்மதுரையே யாகும். இக்காலத்து ஆராய்ச்சியாளரிற் சிலர் கடைச்சங்கத்தின் உண்மையைக்கூட ஐயத்தின்பாற் படுத்துகின்றனர். ஆனால் பாலைக்கலியிலே (35),

> " நிலனாவிற் றிரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
> புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ "

என வந்துள்ளது. இரண்டாவது அடிக்கு 'அறிவினையுடைய சான்றோர் நாவிற் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும்' என நச்சினார்க்கினியர் பொருள் கூறினர். ஈண்டுக் குறித்த சான்றோர் கடைச்சங்கத்துச் சான்றோராகவே இருத்தல் கூடும். அன்றியும் 'மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என கி. பி. 8-ம் நூற்றாண்டுச் சாசனம் ஒன்று கூறுகிறது. ஆகவே, கடைச்சங்கத்தின் உண்மையை ஒப்புக்கொள்ளுதல் பிழையாகாதெனவே தோன்றுகிறது. இச் சங்ககாலத்துப் புலவர்களிற் பலர் மதுரைப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள். இவருட் பலர் மதுரையைப் புகழ்ந்து பாடியுமுள்ளார். 'கூடற்றமிழ்' எனப் பெயர் பெற்ற மதுரைக் காஞ்சியில்,

> " புத்தே ளுலகங் கவினிக் காண்வர
> மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரை "

என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. அகநானூற்றில்

> " பாடுபெறு சிறப்பிற் கூடல் " (231)

எனவும்,

> " பொன்மலி நெடுநகர்க் கூடல் " (253)

எனவும் கூறப்படுகிறது. பரிபாடலில் (19),



> " புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடல் "

என வருகின்றது. அறிவுத்துறையிலும் மதுரைமாநகரம் வென்றியொடு விளங்கிற்று என்பது கருத்து. இவ்வாறு கூறப்பட்ட 'மாடமலி மறுகிற் கூடற்' பதியை

> " பாடல் சான்று பல்புகழ் முற்றிய
> கூடல் " (பரிபாடல். 17)

எனக் கடைச்சங்கப் புலவரொருவர் வாயாரப் புகழ்கின்றனர். இப்பதியின் புகழை,

> " தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
> நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
> குன்றுத லுண்டோ மதுரை கொடித்தேரான்
> குன்றமுண் டாகு மளவு " (பரிபாடற்றிரட்டு. 8)

என்று இங்ஙனம் விரித்தனர் பிறிதொரு சங்கப் புலவர். இப் பெரும்பெயர் மதுரையைப்பற்றி யெழுந்துள்ள கடைச் சங்கச் செய்யுட்களும் பலவாம். 'மதுரைக்காஞ்சி' யென இந்நகரின் பெயரால் அமைந்துள்ள அடிநிமிர்ந்த செய்யுளை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். பரிபாடல் என்னும் நூலிலே நான்கு பருஞ் செய்யுட்கள் இம்மதுரை பற்றியன.

> " வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
> செய்யபரி பாடற் றிறம் "

என்பது பரிபாடலின் அமைதி. இவையே யன்றி, இந்நகரைப் பற்றிய சங்கச் செய்யுட் டொடர்களும் பலவாம். இங்ஙனமாக, தமிழிலக்கியங்களின் பிறப்பகமாகிய கடைச்சங்கத்திற்கும் இம் மதுரைமாநகர்க்கும் மிக நெருங்கிய தொடர்புண்மை காணலாம். கடைச்சங்கப் புலவர்களுள் நடுநாயகமாய் விளங்கியவரும், இறைவனென்றும் எண்ணாது தாம் உண்மை யென்று கண்டதனை நெஞ்சுறுதியுடன் அஞ்சாது கூறிய ஆண்டகையுமாகிய நக்கீரர் இப்பதியினரேயாவர். 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என அவரை வழங்குவர். அன்றியும் தமிழிலக்கியங்களுக்கு இலக்கணம் வரையறுத்த முதற்பெரு

நூலாகிய தொல்காப்பியமும் இம்மதுரைப் பேரூரொடு இயைபுடையதெனவே கருதுதற்கிடமுண்டு. அப்பெருநூல்,

"நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து"

அரங்கேற்றப்பட்டதென அந்நூலின் பாயிரத்திலே பனம்பாரனார் கூறுதல் உணரத்தக்கது. பாண்டியன் அவை அவனது தலைநகராகிய மதுரையின்கண்ணதாதல் வேண்டுமெனச் சொல்லவும் வேண்டுமோ?

இனி, இம்மதுரைப் பேரூரின் சரிதத்தை நீளத் தொடர்ந்து நோக்குவோம். கல்வி இந்நகரில் தழைத்தோங்கியது போலவே சமயவுணர்ச்சியும் தழைத்தோங்கியதெனக் கூறல்வேண்டும். முதன்முதலாக பாண்டிநாட்டில் தோன்றிய சமயம் 'வைதிக சமயம்' என்று கொள்ளுதற்கே சான்றுகள் உள்ளன.

"பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை யெதிரே"

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடுகிறார். கடைச்சங்ககாலத்து அரசாங்கம் ஒப்பிய சமயம் வைதிக சமயமேயாயினும், ஜைன சமயமும் பௌத்த சமயமும் தமிழ்நாட்டில் அதிபுராதன காலத்திலேயே புகுந்துவிட்டன. இவ்விரு சமயத் துறவிகளும் ஆங்காங்கே வதிந்துவந்து சமயத்தொண்டும் தமிழ்மொழித்தொண்டும் புரிந்துவரலாயினர். தமது அருஞ்செயலால் தமிழ்மக்கள் இதயத்தையும் இவர்கள் கவரலாயினர். சிற்சில காலங்களில் சமயம்பற்றிய வாதப் பிரதிவாதங்களும் நிகழலாயின.

"வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி
இரும்பு கவர்வுற்றன பெரும்புன வரகே" (மலைபடு. 112-3)

என வரகின் முற்றியிரட்டித்த கதிர்களுக்கு வாதஞ்செய்வோனது கையிடத்து இணைந்த விரல்கள் உவமமாகக் கூறப்படுகின்றன. முதலில் ஜைனசமயம் சமாதான நெறி



யைக் கைக்கொண்டு தனது கொள்கைகளை அமைதியோடு பரப்பிவந்தது. வள்ளுவப் பெருந்தகையார் இயற்றியருளிய பெருநூலே இதற்குத் தக்க சான்றாகும். இந்நூல் கடைச்சங்க காலத்துக்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டதாகலாம். திருவள்ளுவர் ஜைனரென்பது 'மலர்மிசை யேகினான்' என்ற கடவுள்வாழ்த்துச் செய்யுளால் ஐயுறவிற் கிடனின்றி உணரலாகும்.* இவர் வாழ்ந்த திருநகர் இம்மதுரையேயென்பது இவரைப் 'போதார் புனற்கூடற்கு அச்சு' என ஆன்றோர்கள் கூறுவதால் அறியலாகும். மற்று, பௌத்த சமயமோவெனின், சமாதான நெறியை விடுத்து வாதப்போரால் வெற்றிகொள்ளத் துணிந்தது. இவ்விரண்டு மனப்பான்மைகளும் வள்ளுவர் நூலுக்கு இரண்டொரு நூற்றாண்டு பிற்பட்டுத் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காவியங்களால் உணரக் கிடக்கின்றன. ஜைன காவியமாகிய சிலப்பதிகாரத்தில் வைதிக சமயம் இகழ்ந்துரைக்கப்படவில்லை. பௌத்த காவியமாகிய மணிமேகலையில் 'ஆபுத்திரன்திறம் அறிவித்த காதை' முழுவதும் வைதிகக் கொள்கையின் இகழ்ச்சியுரையாகும். இந்நூலில், பிற இடங்களிலும் இவ்விகழ்ச்சிக் குறிப்பு ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. இவ்விரண்டு காப்பியங்களுள் மணிமேகலை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் இயற்றியதென்பது இங்கே மனங்கொள்ளத்தக்கது.

நாளடைவில் பௌத்தசமயம்வலிகுன்றிவிட்டது. ஜைன சமயம் வலிபெருகிக்கொண்டே வந்து இம்மதுரையை முற்றுகையிட்டது. அரசனைத் தன்வயமாக்கி 'அரசாங்கச் சமயம்' என்னும் நிலையையும்அடைந்தது. 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' யாகலின், குடிகளும் இச்சமயத்தைத் தழுவலாயினர். வைதிகசமயம் தன்னுயிரின்பொருட்டுப் போராடநேர்ந்தது. தொன்மை தழுவி நிற்பவர் பெண்கள்; இவர்களே வைதிக சமயத்திற்கு ஊற்றங்கோலா யிருந்தவர்கள். மதுரையரசனது திருத்தேவியாகிய மங்கையர்க்கரசியாரால் சம்பந்தப் பெருந்தகையார் இந்நகர்க்குச் சென்று ஜைனரை

---

*இதைச் சித்தாந்த சைவர் ஒப்புக்கொள்வதில்லை—பத்திராசிரியர்.

வாதில்வென்று, அரசனை மீட்டு, சைவசமயத்தை மீண்டும் அரசாங்கச் சமயம் ஆக்கியமை பிரசித்த சரித்திர விஷயமே. மதுரையில் நிகழ்ந்த இச்சமய வெற்றியால் சமயக் கல்வியும் சமய இலக்கியங்களும் வளர்ந்து செழித்தன. இத்திருநகரின் சரிதத்தோடு மீண்டும் தமிழ்க்கல்வி முதலியன தொடர்புற்றுப் பெருகலாயின.

ஆனால் ஜைனசமயம் முற்றும் அழிந்துவிடவில்லை. அரசியற் செல்வாக்கை யிழந்தது உண்மை. இதனை ஒரு நன்மையென்றே சொல்லவேண்டும். ஏனெனின் அச் சமயம் பிறவழிகளிலே பேருழைப்பு எடுத்துவந்தது. சிறந்த தமிழிலக்கியங்களையும் இலக்கணங்களையும் இயற்றி அவற்றின் மூலமாகத் தமிழ் மக்கள் இதயத்தைக் கொள்ளைகொள்ள முயன்றது. சூளாமணி யென்ற தலைசிறந்த காவியம் இங்ஙனம் தோன்றியதேயாகும்.

“ நாமாண் புரைக்குங் குறையென்னினும் நாம வென்வேற்
றேமா ணலங்கற் றிருமானெடுஞ் சேந்த னென்னுந்
தூமாண் தமிழின் கிழவன்சுட ராரமார்பிற்
கோமா னவையுட் டெருண்டார்கொளப் பட்ட தன்றே.”

இச்செய்யுளில் ‘தமிழின் கிழவன்’ எனச் சேந்தன் விசேடிக்கப்படுதல் காணலாம். பாண்டியனுக்கே இவ் அடைமொழி யுரியதாதல் அவனுக்குரிய ‘தமிழ் நாடன்’ என்னும் திவாகரப் பெயரால் அறியலாம். ஆதலால், சூளாமணிக் காவியமும் பாண்டிய னவைக்களத்து அரங்கேற்றப்பட்டமை உணரக்கிடக்கின்றது. இங்ஙனமே சீவகசிந்தாமணி யென்னும் பெருங்காப்பியமும் இம்மதுரை மூதூரோடு தொடர்புடையதாகும். இது ஜைனர்கள் இப்பெருங்காப்பியத்தைக் குறித்து வழங்கும் வரலாற்றினால் தெளியப்படுகின்றது. ஆசிரியர் திருத்தக்கதேவர் சோழர்குலத்துதித்தவரேயெனினும், பாண்டிவள நாட்டிலுள்ள மதுராபுரியை அடைந்து, அங்குள்ள சங்கப்புலவர்களோடு அளவளாவியிருந்து, அவர்கள் கருத்துப்படியே சிந்தாமணியை இயற்றி அவர்கள் திருமுன்பில் அரங்கேற்றினரென்ப. இச்சங்கம் கடைச்சங்கமன்று; நீண்டகாலத்திற்குப் பின்னிருந்த



ஒரு சங்கமென்று கொள்ளுதல் வேண்டும். மதுரைக்குப் பெரும்புகழ் விளைத்து அப்புகழ் எங்கும் பரிமளிக்குமாறு செய்த ‘தமிழ்ச் சங்கம்’ மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்று, புதிய புதிய நோக்கத்துடனும் புதிய புதிய கோலத்துடனும் தமிழ்மொழியையும் தமிழிலக்கியத்தையும் பேணிப் போற்றிவந்துளதென்பது இப்பிற்காலச் சங்கமும் நமக்கு நன்கு புலப்படுத்துகின்றது.

மதுரையில் நிகழ்ந்த சமய வெற்றியால் சமயநூல்கள் பெருகினவென்று முன்னர்க் கூறினேன். இச் சமய நூல்களை நான்கு பெரும் பிரிவாக அமைக்கலாம். முதலாவது பக்தி நூல்கள். இந்தப் பக்தி நூல்கள் சம்பந்தமூர்த்திகளது காலத்திற்குச் சிறிது முன்புதானே தோன்றத் தொடங்கியபோதிலும், அவரது சமய வெற்றிக்குப் பின்னரே உரம் பெற்றுத் தழைத்தோங்கலாயின. தமிழ் நாட்டிற் பக்த பரம்பரையையும் பக்திநூற் பரம்பரையையும் உற்பத்தி செய்ததும் இச்சமய வெற்றியே யென்றுதான் கொள்ள வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், ஒன்பது முதலிய திருமுறைகளைப் பாடிய திருஅடியார்கள் முதலியோர்களும், ஆழ்வாராதியர்களும் இந்த பக்த பரம்பரையிலுள்ளவர்களே. இன்னோர் அருளிச் செய்த தெய்வப்பாடல்களே பத்திநூற் பரம்பரைக்குப் பெருமையும் புகழும் அளித்திருக்கின்றன.

இரண்டாவதாக, சமய சாஸ்திரங்களைக் கூறுதல் வேண்டும். பக்தியாலெழுந்த திருவாக்குக்களுக்குச் சாஸ்திர சம்மதமான பொருள் வேண்டும்; அன்றியும் சமயங்களும் சாஸ்திர மூலமாகத் தருக்கித்து நிறுவப்படவேண்டும். இக் காரணங்கள்பற்றியே சமய சாஸ்திரங்கள் தமிழில் தோன்றின. மூன்றாவதாக, நமது பாரததேச முழுமைக்கும் இலக்கிய மூலதனமாகவுள்ள மஹாபாரதம், இராமாயணம் என்ற இதிகாசங்களின்வழித் தோன்றிய தமிழ்நூல்களைக் கூறவேண்டும். இவைகள் ஏற்கெனவே சங்கத்தான்றோர்களால் இயற்றப்பட்டனவென்று கொள்ளுதற்குச் சிலசான்றுகள் உள்ளன. ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும்’ என்பது

சின்னமனூர்ச் சாஸனத் தொடர். சங்க காலத்து இராமாயணத்தைச் சார்ந்தனவாகக் கொள்ளக்கூடிய சில செய்யுட்கள் பழையவுரைகளால் தெரியவருகின்றன. ஆனால் இந்நூல்கள் இப்போது மறைந்து விட்டன. சமயவுணர்ச்சி மிக்குப் பரந்து தமிழ்நாடு முழுதும் அலைமேல் அலையாக மோதி யடித்தெழுந்த காலத்தே அவ்வுணர்ச்சி வேகத்தால் தோன்றிய நூல்களைப்போல, இவைகளால் தமிழ் மக்களை வசீகரிக்க முடியவில்லை. இக் குறைபாட்டினாலேயே இவை வழக்கொழிந்து போயிருக்கலாம். கல்வி மாட்சியும் அறிவின் மாட்சியும் உணர்வுமாட்சியும் உண்மைத் தமிழ் மரபுணர்ச்சியும் ஈடும் எடுப்புமற்ற கவிதாசக்தியும் வாய்ந்தவர் கம்பர். இவர் இயற்றிய இராமாவதாரமே உண்ணத் தெவிட்டாத தெள்ளமிர்தமாகவுள்ளது. இது தமிழ்நாட்டிற் பரந்து பெருகிய பக்தியாற் பிறந்த தென்பது,

"படிகொண்டகீர்த்தி யிராமாயணமென்னும் பத்திவெள்ளம்"

என்று இராமாநுஜ நூற்றந்தாதியில்வரும் அடியினால் உணரலாகும். நான்காவதாக, அடியார்களைக் குறித்தும் புண்ணிய ஸ்தலங்களைக் குறித்தும் எழுந்த புராணங்களைக் கூறுதல் வேண்டும். அடியார்களைக் குறித்தெழுந்த நூல்களுள், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தையும் குருபரம்பரைகளையும் கூறலாம். புண்ணியஸ்தலங்களைக் குறித்தெழுந்த நூல்களைப்பற்றிச் சிறிது கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

தமிழ்வளத்தாலும் சமயவெற்றியாலும் பெயர்சிறந்து விளங்கிய மதுரை மூதூர் ஒரு புண்ணியஸ்தலமாகக் கருதத் தக்க பெருமையை அடைந்துவிட்டது. மணிவாசக சுவாமிகளின் சரித்திரம் இவ்வாறு கருதப்படுதற்குச் சிறந்த காரணமாயிருத்தல்வேண்டும்.

"மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்" (கீர்த்தித்திருவகவல்)

என்றும் பக்தி பரவசராயுள்ள தமிழ் மக்களுக்குப் பருகி



யாராத பராவமுதாக இருத்தல்வேண்டும். இறைவன் 'ஆடக மதுரைக்கரச'னாகப் போற்றப்பட்டான். பாண்டிநாடே அவனது பழம்பதியாயிற்று. 'பாண்டிநாடன்', 'தென் பாண்டி நாடன்' என்று பெயர்புனையப்பட்டான்:

"சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்"

என்பது குயிற்பத்து. ஆனால் பாண்டிநாட்டைக் 'குமரி நாடு' அல்லது 'கன்னிநாடு' என்பது பழையதொரு வழக்கு. குமரியம் பெருந்துறை இந்நாட்டிலிருப்பதாதல் பற்றி இப் பெயரெழுந்தது. கன்னிநாடு என்ற வழக்குண்மை,

"செந்நெறி விளக்குகின்றார் திருமறைக் காடு சேர்ந்த
நன்னிலை கன்னிநாட்டு நல்வினைப் பயத்தாற் கேட்டார்"

என்ற பெரியபுராணச் செய்யுளால் அறியலாம். இக்கன்னி நாடு எங்ஙனம் இறைவனுக் குரியதாயிற்று? இவ்வினாவிற்கு, தடாதகையென்னும் செழியர்குலப்பெண்ணரசி இறைவனைத் திருமணஞ் செய்துகொண்டாள் என்னும் வரலாறு தக்க விடை யளிக்கின்றது.

இவ்வரலாற்றினையும் பிற வரலாறுகளையும் தொகுத்துத் திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணம் எழுந்தது. இது போன்றே தில்லையம்பதி பற்றிக் 'கோயிற் புராணம்' தோன்றிற்று. இங்ஙனமே காளாவர்த்தியிற் பல தலங்கட்கும் ஸ்தலபுராணங்கள் இயற்றப்பட்டன. இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை ஸ்தல புராணங்கள் தோன்றிய வண்ணமாயிருந்தன. இவ்வகையான புராணங்களை மிகுதியாக இயற்றிப் பக்தியைத் தமிழ் மக்களிடைப் பெருக்குவதற்கு முயன்றவர்களுள் இறுதியில் வந்தவர்கள் திருவாவடுதுறை ஆதீனவித்வான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்.

மதுரைமாநகரின் மாஹாத்ம்யம் ஸ்தலபுராணங்களைப் பெருக்குதற்கு மாத்திரம் பயன்பட்டது என்று நினைத்தல் சரியன்று. பிரபந்தங்கள் பல தோன்றுதற்குங் காரணமாயிருந்தது. கோவை, உலா, அந்தாதி, கலம்பகம் முதலியன தோன்றிப் பெருகலாயின. பிற தலங்களின் மாஹாத்ம்யமும்

இங்ஙனமே பிரபந்த வகைகள் பெருகுதற்குக் காரணமாயிருந்தன.

தேவாரம் திருவாசகமாதிய அருட்பாடல்கள் தோன்றும் வரை மதுரையை யாண்ட பாண்டிய மன்னர்கள் சுயேச்சாதிகாரிகளா யிருந்தனர். அத்திருப்பாடல்கள் எழுந்த காலத்துக்குப் பின்னர் மூன்று நூற்றாண்டுகளாகப் பாண்டிநாடு சோழராட்சிக்குள் வந்து பாண்டிய மன்னர்கள் சுயேச்சாதிகாரத்தை இழந்தனர். இக்காலத்தேதான் மெய்கண்ட சாஸ்திரமாதிய சமய சாஸ்திரங்களும் இதிஹாசங்களும் பெரியபுராணமும் சோழ தேசத்தில் தோன்றின. பாண்டிய மன்னர் மீண்டும் முயன்று சுயேச்சாதிகாரம் பெற்றுச் சோணாடு கொண்ட காலத்துத்தான், மதுரையின் மாஹாத்ம்யமும் ஸ்தல புராணங்களும் தோன்றத் தொடங்கின. அம்மன்னர்கள் மீண்டும் துலுக்கர் கலாபத்தால் வலியிழந்து பராதீனரா யிருந்த காலத்தேதான் பிரபந்த வகைகள் பிரசாரமெய்தின.

இறுதியிற் குறிப்பிட்ட இக்காலத்தில் மதுரையிலே இலக்கியம் பற்றிய ஒரு கிளர்ச்சி எழுந்ததென்று எண்ண இடமுண்டு. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலியவற்றைக் கற்றற்குப் பலரும் விரும்பியிருக்க வேண்டும். பொதுவாகத் தமிழ்க்கல்விக்குப் பேராதரவு ஏற்பட்டதெனக் கொள்ளுதல் பொருந்தும். எனவே இலக்கண இலக்கியங்களுக்கு உரைகள் இக்காலத்தே வகுக்கப்பட்டன. பேராசிரியர் மதுரையைச் சார்ந்தவர் என்று கருதுதற்கு நியாயமுளது. நச்சினார்க்கினியர் நிச்சயமாக மதுரை நகரினர் என்பது ‘மதுரையாசிரியன் பாரத்துவாசி நச்சினார்க்கினியன்’ என்று அவர் தம்மைக் கூறிக் கொள்வதால் விளங்கும். இவ்வுரையாசிரியர்களின் வழியைப் பின்பற்றியே சாஸ்திரங்களுக்கும் ‘வியாக்கி’ இயற்றப் பலரும் தொடங்கினர்.

காலகதியிலே பாண்டிய வம்சம் சிதைவுற்றது. விஜயநகரத்தரசர்களின் பிரதிநிதிகளாகிய நாயக்க அரசர்களின் ஆணைக்கீழ் பாண்டியநாடு அடங்கிற்று. இவ்வரசர்கள்பெரும் பக்திமான்களாயிருந்தனர். கோயிற்றிருப்பணிகளை விசேஷ



மாகச் செய்தனர். தமிழ்மொழியையும் ஒரு வகையாய் ஆதரித்து வந்தார்களெனினும், பாண்டிய அரசர்களைப்போலப் பேருரிமை பாராட்டித் தமிழ்த் தொண்டியற்றினர் எனக் கூறமுடியாது. இவர்கள் காலத்தில் தமிழ்ப்பெரும் புலவராக ஒருவரையே எடுத்துச் சொல்லத்தகும். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், சிதம்பரச் செய்யுட்கோவை முதலியவற்றைப் பழந்தமிழின் நறுமணங் குன்றாது இயற்றிச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவி செய்தனர்.

நாயக்கவரசர் வம்சமும் 18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் முடிவுற்றது. சேதுபதிகள் சுயேச்சாதிகாரம் பெற்றனர். இவர்களைக் குறித்துப் பல சிறு பிரபந்தங்கள் தோன்றின. பொன்னாங்கால் அமிர்தகவிராயரியற்றிய ஒருதுறைக்கோவை இங்கே குறிப்பிடத்தக்கது. இக்காலத்திலே மகமதியர்களுக்குச் செல்வாக்கு மிகுந்தது. மகமதியப் புலவர்களும் தமிழ்நூல்கள் இயற்றித் தமிழைப் போற்றினர். உமறுப் புலவர் இயற்றிய சீறாப்புராணம் சிறந்த இலக்கியமாக இன்னும் விளங்குகின்றது. ஐரோப்பியர்களும் நமது தேசத்திற்குவந்து தங்கள் வியாபாரத்தையும் தங்கள் கிறிஸ்து சமயத்தையும் பரப்பி, அரசியல் நிர்வாகத்தையும் கைப்பற்றத் தொடங்கினர். சமய போதனைக்காக நமது நாட்டுக்கு வந்தவர்களுள் பெஸ்கி யென்னும் வீரமாமுனிவர் சிறந்தவர். இவர் தேம்பாவணி யென்னும் காவியத்தை இயற்றியுள்ளார்.

சேதுபதிகளும் தங்கள் சுயேச்சாதிகாரத்தை இழந்து ஆங்கில அரசாங்கத்துக்கு உட்பட்டனர். எனினும் அவர்களுடைய தமிழ்ப்பற்றுச் சிறிதுங் குறைபடவில்லை. ஆனால், தமிழ் நூல்களைக் கற்றுப் பேணுவார் அரியராயினர். தமிழ்நூற் பரப்பின் எல்லையும் அறிந்துகொள்ளற் கரிதாய் முடிந்தது. உண்மையிற் கற்றறிந்தோர் தொகையும் மிகச் சுருங்கிவிட்டது. இந்நிலையில் செல்வஸ்ரீ பொன்னுசாமித் தேவரவர்கள் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் போன்ற தமிழ்ப் பெருமக்களை வரவழைத்து அன்போடு உபசரித்து, அவர்

கள் மூலமாகத் திருக்குறள் முதலிய தமிழ்ப் பேரிலக்கியங்களை அச்சுவாயிலாக வெளியிடுவித்தனர். ஸ்ரீ தேவரவர்களது அரண்மனை தமிழுக்குப் புகலிடமாக விளங்கிற்று.

இக்காலத்தே நிகழ்ந்த இரண்டு பெருநிகழ்ச்சிகளை இங்கே குறித்தல் மிக அவசியமாகும். முதலாவது, திராவிட மொழிகளின் ஒப்புநோக்கிலக்கணம் டாக்டர் கால்ட்வெல் என்னும் ஆங்கில அறிஞரால் இயற்றி வெளியிடப்பட்டது. இதனால் தமிழ்மொழியின் தொன்மையும் பெருமையும் ஆதாரபூர்வமாக நன்குநிறுவப்பட்டன. பிறிதொரு நிகழ்ச்சியாவது, இப்போதுள்ள தமிழ்நூல்களனைத்திற்கும் முற்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியப் பேரிலக்கணம் அச்சில் வெளிவந்தமையாகும். இவ்வரிய நூலை உரையுடன் பதிப்பித்த பேருபகாரி ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களாவர்.

அச்சின் வாயிலாகச் சிலபல நூல்கள் தோன்றவே, தமிழ்க் கல்வியின்மீது தமிழ் மக்களுக்குப் பேரவா எழுந்தது. 'அறிதோ றறியாமை கண்டற்றால்' என்பது பொய்யா மொழி யன்றோ! மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சங்க நூல்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்து வெளியிடத் தொடங்கினார்கள். இவர்கள் செய்துள்ள பேருபகாரத்தாலே தமிழின் தொன்மையும் தமிழ் மக்களின் நாகரிகமும் யாவரும் விரும்பி யாராயும் விஷயங்களாய் முடிந்தன. இவ்வகை ஆராய்ச்சிகளுக்கு ஆங்கிலக் கல்வி பெரிதுந் துணைபுரிந்தது. ஸ்ரீ வி. கனகசபைப்பிள்ளையவர்களும், மனோன்மணீயத்தின் ஆசிரியர் ஸ்ரீ பி. சுந்தரம் பிள்ளையவர்களும் இத்துறையில் முதன்மையாகக் கூறத்தக்கவர்கள். தமிழ் நூலாராய்ச்சிக்கும் தமிழர் சரித்திர ஆராய்ச்சிக்கும் தமிழ்மொழி யாராய்ச்சிக்கும், தமிழ்நூற் பாதுகாப்பிற்கும், தமிழ்க் கல்விக்கும் ஒரு பொதுநிலையம் அமைக்கவேண்டுவது அத்தியாவசியமாயிற்று.

இவ் அவசியத்தை யுணர்ந்து செல்வஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரையிலே தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவியமைத்தார்கள். தங்கள் தமிழார்வத்திற்குப் போக்கிட



மில்லாது வருந்திக்கொண்டிருந்த தமிழறிஞர்கள் பலரும் இச்சங்கத்தின் அங்கத்தினரானார்கள். தமிழ்நாடு முழுதும் இச்சங்கத்தை ஆதரவோடு ஏற்றுக்கொண்டது. தமிழுக்குத் தனியுரிமை பூண்டு விளங்கிய இம் மதுரை மாநகரில் இச்சங்கம் நிறுவப்பெற்றமையை எண்ணியெண்ணி அனைவரும் மகிழ்ந்தனர். இச்சங்கத்தை நான்காஞ் சங்கமெனப் பலரும் கொண்டாடினர். தமிழ்க் கலாசாலையொன்று ஏற்படுத்தப்பட்டது. 'செந்தமிழ்' என்னும் பத்திரிகையொன்று மாதந்தோறும் வெளியிடப் பெறலாயிற்று. இச்சங்கத்தின் முக்கியமான அங்கத்தினர்களி லொருவர் ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகளாவர். இவர்களிடத்தே ஆங்கிலக் கல்வியும் தமிழ்க் கல்வியும் சிறந்து விளங்கின. தாமே பல நூல்களை இயற்றியதோடு, பல மாணவர்களுக்கு இவர் இயற்றமிழாசிரியராயும் விளங்கினர். சென்னையில் தமிழ்பற்றிய ஒரு புதுக்கிளர்ச்சி இவர்களால் உண்டாகியது. பலரும் தமிழ் நாடகங்கள் முதலியன இயற்றினர். புதுமுறையிற் செய்யுட்களும் எழுதலாயினர்.

இவ்வகையான தமிழ்க் கிளர்ச்சியோடு 20-ம் நூற்றாண்டு தொடங்கிற்று. இந்நூற்றாண்டு தொடங்கி 40 வருஷங்கள் ஆகிவிட்டன. நமது தமிழ்மொழியின் நிலை இப்போது எவ்வாறுள்ளது? எங்கும் தமிழ் நூல்கள் எழுத வேண்டுமென்ற ஓர் பரபரப்புக் காணப்படுகிறது. ஆண்பெண் என்ற இருபாலாரும் நூலியற்றும் செயலில் முனைந்துநிற்கின்றார்கள். வெளிவரும் நூல்களில் ஒரு பெரும்பகுதி கதைகளாகவும் குட்டிக்கதைகளாகவும் நாடகங்களாகவும் உள்ளது. ஒரு சிலர் கவிதைகளும் எழுதுகின்றனர். ஆங்கிலங் கற்ற அறிஞர் ஒரு சிலர் சரித்திர வரலாறுகள் முதலியன எழுதிவருகின்றனர். மிகமிகச் சிலரே விஞ்ஞான சாஸ்திர முதலியனபற்றி எழுதுகின்றனர். இவைகளேயன்றி, பத்திரிகைகளும் புற்றீசல்போலத் தோன்றுகின்றன. மாணவர்களுக்கென எழுதப்படும் நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளிவருகின்றன. இன்னவை அனைத்திற்கும் பொதுவான ஒரு குறை யாதெனின், இவை பெரும்பாலும் நல்ல தமிழ்நடை

யில் பிழையில்லாதபடி எழுதப்பட்டிருக்கமாட்டா. தமிழ் மட்டும் கற்றவர்கள் பலரும் நூல்கள் எழுதிவருகிறார்கள். இவர்களிற் பெரும்பாலார் இக்காலத்துத் தமிழில் எழுதுவதில்லை. வழக்கொழிந்த சொற்களையும் வாக்கிய அமைதியையும் கையாண்டு, கற்போருக்குப் பேரிடர் விளைத்துவருகின்றனர். அன்றியும் இன்னோர் எழுதுவதில் விஷயங்கள் இருக்கமாட்டா. விஷயசூனியத்தை மறைப்பதற்காகவே அரிதுணர் சொற்களை இவர்கள் வழங்குகிறார்களெனத் தோன்றுகிறது. இந்நிலையில் தமிழ் - இலக்கியம் அபிவிருத்தி யடைவதற்கு இடமேயில்லை.

இங்கே குறிப்பிட்ட குறைகள் நீங்குவதற்கு வழி யாது? நமது கல்வித்திட்டம் முழுவதும் மாறி யமைந்தாலொழிய நமக்கு விமோசனம் இல்லையென் றெண்ணுகிறேன். மேற் சுட்டிய நூலாசிரியர்களை இருவகையாகப் பிரித்துக்கொள்ளலாம். ஒருவகையாருக்குப் பொதுக்கல்வி யறிவு உண்டு ; ஆனால் தமிழறிவு இல்லை. பிறிதொரு வகையாருக்குத் தமிழறிவு உண்டு ; ஆனால் பொதுக்கல்வியறிவு இல்லை. பொதுக் கல்வியறிவு மட்டும் உடையவர்களுக்குத் தமிழறிவும், தமிழறிவு மட்டும் உடையவர்களுக்குப் பொதுக்கல்வி யறிவும் வேண்டும். தமிழ்க் கல்வியறிவோடு கூடிய பொதுக்கல்வியே நல்ல பயனை அளிக்கவல்லது. இதற்குப் பொதுக்கல்வியைத் தாய்மொழியாகிய தமிழ் மூலமாய்ப் போதித்தல் வேண்டும். இங்ஙனமே பொதுக்கல்வியோடு கூடிய தமிழ்க் கல்வியே நல்ல பயனை அளிக்கவல்லது. இதற்குப் பொதுக்கல்வியறிவு பெற்ற பின்னரே தனித்தமிழ்க் கல்வி போதிக்கப்படுதல் வேண்டும். இவ்விருவகைக் கல்வியையும் முறையேகவனித்து வரும் அரசாங்கத்தினரும் ஸர்வ கலாசாலையாரும் என்ன செய்திருக்கின்றார்க ளென்பதை இனி நோக்குவோம்.

நமது அரசாங்கம் நாம் நல்வாழ்வு வாழ்வதற்குரிய சௌகரியத்தை நல்கியிருக்கிறது. நாட்டிற் குழப்பங்கள் யாதுமில்லாதபடி நன்கு பாதுகாத்துவருகிறது. அந்நிய நாட்டினரால் பெரும்பாலும் நாம் துன்புறாதபடி அரசியல் நலத்தைப் பேணிவருகிறது. ஆனால், கல்வி



சம்பந்தமான வரையில் தமிழ் மக்களின் நலத்தையே முற்றுங் கவனித்து அரசினர் செய்யவேண்டும் அனைத்தையும் செய்துவிட்டதாகக் கூற முடியாது. வெகுகாலமாகத் தமிழ்க் கல்வியையே புறக்கணித்து ஆங்கிலத்தில் மோகங் கொள்ளும்படி செய்யும் கல்வி முறையையே அரசாங்கம் நமக்கு வகுத்திருந்தது. நம்மவர்களும் தங்களை ஆங்கிலராகவே பாவிக்கத் தொடங்கிவிட்டனர். ஆங்கில மொழியிலுள்ள நூல்களைக் கற்றுப் பயனடைவதுகூட அத்தனை முக்கியமாகப் புலப்படவில்லை. ஆங்கிலச் சொல்லை ஆங்கிலேயன் உச்சரிப்பதுபோல உச்சரித்துவிட்டால், அது ஆங்கிலக் கல்வியின் பேரெல்லையென்று எண்ணலுற்றனர். இது ஒருபுறம் இருக்க, ஆங்கிலக் கலாசாலையிற் கற்றுவந்த பின்னர் அரசாங்க உத்தியோகத்தைத் தவிர, வேறு எவ்வகை வேலைக்கும் உதவாதபடி நம்மவர்கள் ஆகிவிட்டனர். நாட்டிலே வேலையில்லாத்திண்டாட்டம் நடனமாடலுற்றது. அரசாங்கத்தினர் இக்குறைகளை யுணர்ந்து உயர்தரக் கல்வியின் முடிவில் தொழிற்கல்வியும் இருத்தல் வேண்டும் என்று கருதினார்கள். இக்கருத்திற் கிணங்கக் கல்விமுறையிற் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆனால் அடிப்படையான சீர்திருத்தம் சில ஆண்டுகட்கு முன்வரை செய்யப் பெறவே இல்லை. உலகில் ஓரிடத்துமில்லாத விநோதமான முறையில் இக்கல்வி புகட்டப்பெற்று வந்தது. தாய் மொழியிற் கல்வி கற்பதுதான் உலகிற் கண்ட முறை. தாய்மொழியிற் கல்வி பயிலாது வேற்றுமொழியிற் கல்வி பயில்வதுதான் சரியான முறையென்று நமது தமிழ்நாட்டு அறிஞர்களும் அரசியலாளரும் கருத்துக்கொண்டார்கள். இவ்விநோத முறையைக் கையாண்டதனால் நமக்கும் தமிழுக்கும் ஏற்பட்டுள்ள குறைகளுக்கு அளவேயில்லை. தமிழ்க் கல்விக்கும் பொதுக் கல்விக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை யென்று ஆகிவிட்டது. தமிழ் ஒன்றுக்கும் உதவாத பாஷை யென்று தமிழ் மக்களே சொல்லத் தொடங்கிவிட்டனர். பொதுக்கல்வியின் பொருட்டு அளவிற்கு மிஞ்சிய காலம் செலவழித்த போதிலும் அதனால் அடையும் கல்விநலம் அளவிற் சிறிய

தாக முடிந்தது. ஒருவன் வருந்திக் கற்ற அச்சிறிய கல்விக்கும் அவன் பிற்கால வாழ்விற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமற் போயிற்று. இறுதியாகத் தமிழை உயிரற்றுப் போம்படி செய்துவிட்டது. தமிழ் மக்களது அறிவு வறண்டு, அவர்கள் உலகம், பொருளும் உயிருமற்றுக் கேவலம் சொற்களால் நிரம்பிய பொய்யுலகம் ஆகிவிட்டது. இப்பரிதாபகரமான நிலையை யுணர்ந்து தமிழ் மக்களுக்கும் தமிழ்மொழிக்கும் நீடித்த பயனை அளிக்க வெண்ணி உயர்தரக் கலாசாலைகளில் தமிழ்மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் வேண்டும் என்று திட்டம் செய்தவர் ஸ்ரீ. ஸி. இராஜகோபாலாச்சாரியாரவர்கள். அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. ஆனால் இச்சீர்திருத்தம் இன்னும் வேண்டுமளவுக்கு வந்துவிட்டதென்று நாம் எண்ணுவதற்கில்லை. இச்சீர்திருத்தம் முற்றும் நிறைவேறுவதற்குப் பற்பல இடையூறுகள் இருந்து வருகின்றன. இறைவனே நம்மைக் காப்பாற்றவேண்டும்!

அரசாங்கத்தினர் பொதுக் கல்வியைப் போற்றுமுறை இது. ஸர்வகலாசாலையார் தனித்தமிழ்க் கல்வியைப் போற்று முறையைக் கவனிப்பதும் இன்றியமையாததுதான். ஆனால் நான் அதைப்பற்றிப் பேசுதல் முறையன்று. எனினும் ஒரு சில விஷயங்கள் கூறவேண்டுவது அவசியம்.

பொதுக்கல்வியை நீக்கித் தமிழ்க்கல்வியைமட்டும் நோக்குவோமாயின், சென்னை ஸர்வகலாசாலையில் தமிழாராய்ச்சித்துறையொன்று உள்ளது. மேல்நாட்டு விஞ்ஞானம் பற்றியும் கலைபற்றியும் சிறந்த தமிழ்நூல்கள் எழுதுவோர்க்குப் பரிசளிக்கப்படுகிறது. ஆங்கிலத்திலுள்ள சிறந்த நூல்களை மொழிபெயர்ப்பதற்குப் பொருளுதவும் ஆலோசனையுள்ளது. தமிழிலே சிறந்த நூல்கள் எழுதுவோர்க்கும் பதிப்பிடுவோர்க்கும் பொருளுதவி செய்யப்படுகிறது. தமிழ்க் கல்வியில் மேம்பாடு அடைய விரும்புவோர்க்கு வித்வான், B. O. L., M. O. L. முதலிய பரீக்ஷைத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் போதாவெனச் சிலர் கருதலாம். இடம் பொருள் ஏவல் வாய்ப்பின், இன்னும் பல துறை



களிலும் தமிழ்ப்பணி புரிவதற்குத் தடையிராதென்றே நினைக்கிறேன். இது நிற்க. B. O. L. முதலிய பரீக்ஷைத்திட்டங்களை நோக்கினால் ஒரு விஷயம் புலனாகும். இத்திட்டங்கள் தமிழ் மட்டும் உணர்ந்தவர்கள் பொதுக் கல்வியறிவையும் பெற்றுக்கொள்ளும் தகுதி வாய்ந்தவர்கள் ஆகவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே அமைக்கப்பெற்றுள்ளன. ஆகவே, நான் கூறிய குறையை ஸர்வகலாசாலையாரும் உணர்ந்து பரிகாரந் தேடியிருக்கிறார்களென்பது தெளிவாம்.

அரசாங்கத்தார் முயற்சியும் ஸர்வகலாசாலையார் முயற்சியும் பயன் நிரம்புதல் பொதுமக்களைப் பொறுத்ததாகும். இவ்விரண்டு ஸ்தாபனங்களும் கையாளும் முறை சீர்திருந்துவதும் பொதுமக்களைப் பொறுத்ததேயாகும். பொதுமக்கள் நிலை எவ்வாறுள்ளது? நான் அறிந்தவரையில் அந்நிலை சிறிதும் திருப்திகரமாகவில்லையென்றுதான் சொல்லுவேன். அரசியல் வியவகாரத்தினால் நமக்குள் பிளவு ஏற்பட்டு, ஒன்றையும் நேர்மையுடன் பார்க்கவொட்டாதபடி நமது கண்களை மஞ்சட்காமாலை பீடித்திருக்கிறது. சாதிச் சச்சரவு இப்பொழுது மிகவும் வலுத்துவிட்டது. எல்லா விஷயங்களிலும், ஆரியன் திராவிடன், பிராமணன் அப்பிராமணன் என்ற எண்ணம் ஊடுருவிச்சென்று கொண்டேயிருக்கிறது. இவற்றிற்கு மேலும் மொழிபற்றிய சச்சரவு. வடமொழியென்றால், சிலருக்கு அறவே வெறுப்பு. தமிழ்மொழியென்றால் வேறு சிலருக்கு அப்படியே. இன்னோர்கள் கருத்தில் கம்பனும் வான்மீகியும் ஓயாமற் போர்புரிந்துகொண்டேயிருக்க வேண்டும்! இவ்வித மனப்பான்மைகள் ஒன்றன்மேலொன்றாக ஜனசமுதாயத்தைக் கேடுறச்செய்துவரும் இக்காலத்தில் தமிழ்மொழிக்கு எது நன்மையென்பதை எப்படி நாம் உணர முடியும்? நலந் தீங்கு எது என்பதை அறியும் ஆற்றலே நமக்குக் குன்றிவிட்டது.

ஆனால் இரண்டு பெரிய சக்திகள் நமது நாட்டில் வேரூன்றித் தழைத்து வளர்ந்தோங்கி வருகின்றன. ஒன்று மேல்நாட்டுக் கல்வி யறிவு; பிறிதொன்று தேசீய வுணர்ச்சி. இவ்விரண்டும் எவ்வகை யிடையூறுகளையும்

போக்கவல்ல பேராற்றல் படைத்தவை. மேல்நாட்டுக் கல்வி யறிவு ஒவ்வொரு துறையிலும் நமக்கு உண்மையான வழி காட்டியாயுள்ளது; மூவா இளநலம் வாய்ந்தது; நமது அறிவு பரந்தோங்குவதற்கு இன்றியமையாதது. அக் கல்வியறிவு வேண்டும் என்னும் பேரவா தமிழ்மக்கள் உள்ளத்தில் வேரூன்றிவிட்டமை ஒரு பெருநன்மையென்றே சொல்லுவேன். ஆங்கிலத் துரைத்தனத்தார் நமக்கு அளித்துள்ள பேறுகளில் இதுவொன்றே நமக்கும் தமிழுக்கும் நீடித்த சாசுவதமான நன்மையை விளைக்கக் கூடியது. ஆனால் ஓர் எச்சரிக்கை. மேல்நாட்டுக் கல்வி யறிவு வேறு; மேல்நாட்டு மொழி யறிவு வேறு. மொழி யறிவு, கல்வி யறிவைச் சம்பாதித்தற்குரிய ஓர் கருவியேயாகும். இதனை மறத்தல்கூடாது. இன்னும் ஒன்று. கேவலம் மொழியறிவினால் கேடு விளைதல் இயல்பு. சிறிது ஆங்கிலங் கற்றவுடன் நம்மவர்களுட் பலருக்கும் தலை திரும்பிவிடுகிறது. ஆங்கிலங் கற்ற மகன் தன் தந்தையையும் தாயையுங்கூட வேறினத்தைச் சார்ந்தவர்களென்று எண்ணி விடுகிறான். தமிழை அநாகரிக பாஷையென்று தள்ளி யொதுக்குகிறான். இந்தக் குற்றம் நம்மைப் பாதிக்காதபடி மேல்நாட்டுக் கல்வியறிவைப் பெருக்கித் தமிழிற் பல துறைகளிலும் நூல்கள் இயற்றி நமது பொதுவறிவை விருத்தியாக்குதல் வேண்டும்.

பிறிதொரு பெரிய சக்தி தேசியவுணர்ச்சி யென்றேன். இவ்வுணர்ச்சி இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வலுப்பெற்று வருகிறது. இவ்வுணர்ச்சியினால் சாதிச்சச்சரவு, மொழிச்சச்சரவு முதலிய தொற்றுநோய்கள் சிறிது சிறிதாக மாய்ந்துவருகின்றன. போலியாகவன்றி உண்மையான தமிழ்ப்பற்று இதனால் விளைந்துவருகிறது. நீண்ட காலமாகப் பஞ்சபாட்டுக்களையும் புராணங்களையும் பன்னிப் பன்னியுரைத்துவந்ததனால், தமிழ்ச் சொற்களுக்கே பொருளுணர்த்தும் ஆற்றல் குறைந்துவிட்டதோ என்று ஐயுறும் நிலை வந்துவிட்டது. தேசிய வுணர்ச்சியினால்தான் தமிழ்ச் சொற்களுக்குப் புத்துயிரும் புத்தழகும் பிறந்திருக்கின்றன. இவ்வுணர்ச்சியைக் குறிக்கும் சொல்லே நமக்குத் தாரக



மந்திரமாதல்வேண்டும். இவ்வுணர்ச்சிதான் கவிஞர் பாரதியாரை நமக்கு அளித்திருக்கிறது.

இப்புதிய சக்திகளால், நமது பொதுக்கல்வியறிவு மேன்மேலும் பெருகுதல் வேண்டும். பொதுக்கல்வியறிவுக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஒவ்வொரு தேசத்து மொழியின் சரிதமும் இதற்குச் சான்று பகரும். பொதுக்கல்வி யறிவு எவ்வளவாக உயர்ந்திருக்கிறதோ அவ்வளவே தமிழிலக்கியங்களும் சிறந்து விளங்கும். இனி வரவேண்டும் தமிழிலக்கியங்கள் ஆசிரியர்கள் தாமே கற்று ஆனந்திப்பதற்கு இயற்றப்படுவனவல்ல. அவ்வாசிரியர்களை ஆதரிக்குந் தனவந்தர்கள் கேட்டு மகிழ்வதற்கு இயற்றப்படுவனவும் அல்ல. பொது மக்களின் அங்கீகாரமும் ஆதரவுங் கருதியே எழுதப்படுவனவாம். இவ்வகையான ஆதரவே தமிழிலக்கிய வளர்ச்சிக்கு நீடித்த துணையாக நிற்கவல்லது. பொதுமக்கள் தங்களுக்குரிய பொதுக் கல்வியறிவின் அளவிற்கேற்றபடி உயர்ந்த இலக்கியங்களையே போற்றுவார்கள். இதனை உணர்ந்து ஆவன புரிதல் நம்மனைவர்க்கும் கடனாம்.

இதுகாறும் இப் பெரும்பெயர் மதுரையின் சரிதத்தைக் கூறுமுகத்தால், தமிழிலக்கிய சரிதையை முதற்கணிருந்து இந்நூற்றாண்டின் தொடக்கம் வரையிற் கூறினேன். பொதுப்பட நோக்குமிடத்து, சிறந்த இலக்கியங்கள் பண்டைக் காலத்தில் நிரம்பத் தோன்றின. பிற்பாடு இலக்கிய வுணர்ச்சியும் சமய வுணர்ச்சியும் கலந்து, தமிழ்க் கவித்துவம் தன்பேரெல்லையை அணுகிற்று. பின்னர், போலி இலக்கிய வுணர்ச்சியும் போலிச் சமயவுணர்ச்சியும் தலையெடுத்து, தமிழிலக்கிய வளர்ச்சியைத் தடுத்துவிட்டன; நல்ல தமிழிலக்கியங்கள் அருகியே காணப்படுவனவாயின. பின்னர் பழந்தமிழ் நூல்களைப் போற்றுமுறையில் உரைகள் தோன்றலாயின. சென்ற நூற்றாண்டின் இறுதியில் தமிழ்ச் சரிதம் பற்றியும் தமிழ் மக்கள் சரிதம் பற்றியும் ஆராய்ச்சி நூல்கள் வெளிவரலாயின. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் புதுவதோர் கிளர்ச்சியேற்பட்டது.

இப் புதுக்கிளர்ச்சி தோன்றியதன் பின்னர் தமிழின் நிலை எவ்வாறுள்ளதென ஒருவாறு சுட்டினேன். தமிழைப் பேணுதற்கு அரசாங்கத்தாரும் ஸர்வகலாசாலையாரும் செய்துவரும் முயற்சிகளைக் குறித்துப் பேசினேன். தமிழின் மேற்கதி சரியான நெறியிற் செல்லவேண்டுமாயின், தமிழ சமுதாயத்திற் காணும் கேடுகளொழியவேண்டுமென்று கூறினேன். இறுதியாக, தமிழ்நாட்டில் எங்கும் பரந்துலவும் இருபெருஞ் சக்திகளைக் கூறி, அவற்றின் துணையால் தமிழிலக்கிய வளர்ச்சியைப் பேணுமாற்றை விளக்கினேன்.

இவ்வுரையை இதுகாறும் அன்போடு கேட்டுக்கொண்டிருந்த உங்களனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமது நோக்கங்களெல்லாம் இனிது நிறைவேறும்படி எல்லாம்வல்ல இறைவனை வணங்கி எனது தலைமையுரையை முடித்துக்கொள்கிறேன்.

தெய்வப் புலவோர் தெளித்ததமிழ் வள்ளுவனார்
வையத்துத் தேர்ந்து மதித்ததமிழ்—துய்யபுகழ்க்
கம்பனலம் பேணக் கனிந்ததமிழ் காசினியில்
இன்பமுறு வாழ்வாம் எமக்கு.

# அகில இலங்கைச் சைவ மகாநாடு

இம் மகாநாடு 26, 27, 28–12–'40 ஆகிய வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் மிக்க விமரிசையாக நடைபெற்றது. சைவத் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைவராயமர்ந்து செவ்வனே கூட்டத்தை நடத்தினார். அவரோடு பெருஞ்சொற் கொண்டல் புரிசை திரு. சு. முருகேச முதலியாரும் சொற்பொழிவு நிகழ்த்துவான் வந்திருந்தார். முதல்நாள் வியாழக்கிழமை காலை, தலைவரும் திரு. முருகேச முதலியாரும் வண்ணைநாவலர் வித்தியாசாலை



யிலிருந்து மேளவாத்தியம் முழங்க ஊர்வலமாகப் பிரசங்க
மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்துசாத
னத் துணையாசிரியராகிய திரு. க. கி. நடராஜன் அவர்கள்
அகிலஇலங்கைச் சைவஇளைஞர் மகாசபையாரின் சார்பாகத்
தாமியற்றிய வரவேற்புப் பாக்களைப் படித்துக் கொடுத்தார்.
அதன்பின் நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவரவர்கள்
தமது வரவேற்புரையை நிகழ்த்தினார். அடுக்க, தலைவர் திரு.
ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களின் தலைமையுரை நடைபெற்
றது. அவ்வுரை தலைவரவர்களது பேச்சுத்திறனையும் பலதுறை
யாராய்ச்சித்திறனையும் விரிந்தநோக்கையுங் காட்டாநின்றது.
பிற்பகலில் திரு. சு. பெரியதம்பி, பி.ஏ. அவர்களால் "உள்ளத்
துறவு" என்னும் விஷயம்பற்றி ஒருசொற்பொழிவு நிகழ்த்தப்
பட்டது. அடுத்தாற்போலப் புரிசை திரு. முருகேசமுதலியார்
அவர்களால் "கச்சியப்பர் கவித்திறன்" என்னும் பொருள்
பற்றிப் பல சுவையும் பொருந்திய சொற்பொழிவொன்று
நிகழ்த்தப்பெற்றது. புராணங்களில் இவர் மிக்க பயிற்சியும்
பயபக்தியும் உடையவர் என்பதை இவரது பேச்சுக்கள்
காட்டின. கதாகாலக்ஷேபங்களில் உபயோகிப்பதுபோன்று
இவர்கள் தமது பேச்சுகளினிடையே நகைச்சுவை பயக்கும்
சிறு கதைகளையும் வேறு சில தந்திரங்களையும் கையாண்டு
சொல்லுக்குத் தட்டுப்படாமற் பேசுவதால் சபையை வசீ
கரிக்கலாயினர். மூன்றாம்நாள் இவர் நிகழ்த்திய 'சைவமும்
பாரதமும்' என்னும் விரிவுரை இவர்தம் உயர்தர சங்கீத
அறிவையும் புலப்படுத்துவதாயிற்று. பாரதத்தில் இவர்க்
குள்ள ஆட்சியையும் ஆராய்ச்சியையும் காட்டிச் சபையோ
ரைப் பெரிதுங் கவர்வதாயிற்று. பொதுவாகச் சொல்லுங்
கால், இம்முறை மகாநாட்டுக்கு வந்திருந்த இந்தியப் பிர
முகர்களிருவரும் விரிந்த நோக்குடையோராகக் காணப்
பட்டனர்.

அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமையன்று 'நால்வர்
காட்டிய நன்னெறி' என்னும் பொருள்பற்றித் தலைவரவர்
களால் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவு அவர்களுக்குத்
தேவாரங்களிலுள்ள பயிற்சியையும் பக்தியையும் காட்டிற்று.

திருவைந்தெழுத்தே எல்லாந் தரவல்லது என்பதை அவர்கள் வற்புறுத்தினார்கள். அடுக்க, 'மும்மலம்' என்னும் பொருள் பற்றி திரு. ஐ. பொன்னையா அவர்கள் பேசினார்கள். பிற்பகலில் 'முருகன் வணக்கம்' என்னும் விஷயம் பேசப்பட்டது. அதன்பின் 'காரைக்காலம்மையார்' என்னும் விஷயம்பற்றி நிகழ்த்தப்பெற்ற அரிய சொற்பொழிவோடு அன்றைய நிகழ்ச்சிகள் பூர்த்தியாயின.

மூன்றா நாளாகிய சனிக்கிழமையன்று 'தோடு கூற்றுப் பித்தா' என்னும் விஷயம் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களாலும், 'சேக்கிழார் செய்யுட்டிறன்' என்னும் விஷயம் முதலியார் திரு. செ. சின்னத்தம்பி அவர்களாலும் முறையே பேசப்பட்டன. சேக்கிழார் செய்யுட்டிறன் பேசவந்த திரு. சின்னத்தம்பி அவர்கள் நல்ல நடையில் கேட்போர்க்கு நன்கு மனசிற் பதியும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலோடு தமது பேச்சை நிகழ்த்தினார். வள்ளுவர், திருவாசகம் முதலிய நூல்களில் அவருக்குரிய பயிற்சியையும் அவர்தம் பேச்சுக் காட்டிற்று. அதன்பின், தலைவரவர்கள் 'சைவமும் தற்கால மாணவரும்' என்னும் பொருள் பற்றி நிகழ்த்திய சொற்பொழிவு இன்றைய யாழ்ப்பாண மாணவர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாக இருந்தது.

பிற்பகலில், 'விரதம்' என்னும் பொருள்பற்றி அத்வக்காத் திரு. கா. அருளம்பலம் அவர்களும், 'சுந்தரமூர்த்தி நாயனார்' என்னும் பொருள்பற்றி திரு. சி. சுப்பிரமணிய தேசிகரவர்களும் பேசினர். அதன்பின், அகில இலங்கைச் சைவ இளைஞர் மகா சபையாரால் நடாத்தப்பட்ட தேவார, உபந்நியாச, புராணபடனப் பரீட்சைகளில் முதன்மைபெற்ற மாணவர்களுக்கும், கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்பட்ட சமயபரீட்சைகளில் முதன்மைபெற்றோருக்கும் முறையே அவ்விரு சபையாராலும் பரிசுகள் வழங்கப்பட்டன. சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தாரால் நடாத்தப்படும் சைவப் புலவர் இளஞ்சைவப் புலவர் தேர்வு



களிற் சித்திபெற்றோருக்குத் தாராதரப் பத்திரங்கள் பரிசுகள் வழங்கப்பட்டன.

அதன்பின் 'சைவமும் பாரதமும்' என்னும் பொருள் பற்றித் திரு. முருகேச முதலியார் மிக அரியதொரு சொற்பிரசங்கமாரி பொழிந்தார்.

ஈற்றில் இந்துசாதனப் பத்திரிகாசிரியர் திரு. ம. வே. திருஞான சம்பந்தம்பிள்ளை அவர்களாலும் மகாநாட்டுக் காரியதரிசியாகிய திரு. மு. மயில்வாகனமவர்களாலும் தலைவர்க்கும் பிரசாரர்களுக்கும் ஏனையோர்க்கும் நன்றியுரை கூறப்படத் தேவார பாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

—"இந்துசாதனம்"

## அகில இலங்கைச் சைவ மகாநாட்டுத்
# தலைமைப் பேருரை

[திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்]

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
　　போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
　　போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறா மிணையடிகள்
　　போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
　　போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதமிழ் நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

**சைவ அன்பர்களே! தாய்மார்களே! திருவருள் நலத்தால் ஈண்டுக் குழுமியிருக்கும் உங்கள் அனைவரையும் நோக்**

கும்பொழுது என் உள்ளத்தில் சிவவடிவமும், சத்தி வடிவமும் கலந்து பொலிவு தருவதான இன்ப உணர்வு தோன்றியோங்குகின்றது. ஆகவே உங்களை அப்பனும் அம்மையும் ஆக நின்று அருள் கனிந்துயிர்களை ஆட்கொள்ளும் திருவருள் வெள்ளத்தில் மூழ்கித் துய்க்கும் பேருவகையாளர்களாகவே யான் எண்ணி வணக்கஞ் செய்கின்றேன்.

அறிஞர்காள்! நீங்கள் வதியும் யாழ்ப்பாணம் பண்டுதொட்டுச் சிவன் கழல் ஏத்துஞ் செல்வத்தில் சிறந்து விளங்கி வருவதை நான் நன்கறிவேன். இன்று இம் மகாநாட்டில் படித்த வரவேற்புப் பாட்டின்கண் இன்றைய நாளை யோர் மங்கல நாளாகக் குறித்தார்கள். அதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். ஏனெனிற் சிவநெறிச் செல்வங்கொழிக்கும் உங்கள் ஈழத் தமிழ் நாட்டைக் காணவேண்டுமென்ற விருப்பம் எனக்கு நிரம்பவும் உண்டு. அவ்வவா முற்றுப்பெற்ற நாள் இன்றைய நாளாக இருத்தலினாலும் சிவநெறித் தொண்டில் ஈடுபட்டிருக்கும் சிவநெறிச் செல்வ மக்களாகிய நீங்கள் கூடியிருக்கும் பேரவையினைக் காணும் பெருவாழ்வு எமக்கின்று கிடைத்தமையானும் என்பது. "மனத்திருந்த கருத்தறிய அருள்வாய்" என்று பெரியார் இறைவனை வேண்டிக் கொண்டாங்கு எனது உள்ளத்தின்கண் முகிழ்த்த கருத்து முற்றுப் பெறும் நன்னாள் இன்றே பொருந்துவதாக அமைந்து கிடைந்தமை குறித்து யாங்கள் இரு பகுதியாரும் மகிழ்வடைவோமாக. நாவலர் பெருமான் அவர்களின் சிவநெறி வாழ்வு ஒளிர்ந்த செம்மையால் வளம்பெற்ற இச் சைவத் தமிழ் நாட்டில் யானும் ஓர் சைவத் தொண்டனாகச் சைவ மகாநாட்டுக்குத் தலைமை தாங்கி நிற்குந் தகுதிப்பாட்டை யுடையோனென நீங்கள் கருதி அன்பின் மிகுதிப்பாட்டினாலே என்னை மிகவும் பெருமைப்படுத்தி விட்டீர்கள். வரவேற்புப் பாவினும், வரவேற்பு உரையினும் என்னை மிகுதியும் போற்றியிருக்கின்றனர். ஆனால் அத்தகைய பெருமைகளை என்னிடத்தில் எதிர்பார்த்து நிற்கவேண்டாம். அவர்கள் என்மேற் கொண்ட அன்பினால் என்னைப் புனைந்துரைத்தார்கள்.



மற்று யான் என்னைப்பற்றி அவையடக்கமாகக் கூறுவதொன்றுண்டு. "ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே" யென்ற திருமொழியின்படி யென்னை யித் திருப்பணியில் ஈடுபடுத்திய இறைவன் திருவருளை என்னென்பேன். யானோ,

"குலம் பொல்லேன் குணம் பொல்லேன்" என்றும் "சீலமின்றி" யென்றும், "மாலுங்காட்டி" என்றும் சமயாசிரியர்களால் குறிப்பிட்ட திருப்பாட்டுக்களின்கண் உள்ள புன்மை இயல்புகளையே பெரிது முடையேன் என்பதை மீண்டும் உங்களுக்கறியத் தருகின்றேன். இங்ஙன் என்னை மிகுதியும் பெருமை படுத்தியிருக்கின்ற உங்களுக்கு யான் அறிஞர்களிடங் கேட்டும் அவர்களின் வாயிலாக அறிந்தும் ஈட்டியுள்ள சில சமய உண்மைகளை உங்கள் முன்னிலையில் கூறலாமெனத் துணிகின்றேன்.

## அகில இலங்கைச் சைவ வாலிபர் மகாநாடு

சிவநெறிச் செல்வர்காள்! உங்களுடைய மகாநாட்டின் பெயர் அகில இலங்கைச் சைவ வாலிபர் மகாநாடு என இருத்தலின் வாலிபர்கள் ஆகியஉங்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் சில சிவநெறி யுண்மைகளையே சிறப்பாகக் கூறுங்கடமைப்பாடு உடையவனாகின்றேன். ஏனையோராகிய அறிவின் மிகுந்த பெரியார்க்கு வேண்டிய உண்மைகளைப் பொதுவாகவே கூறுங் கருத்துடையேன்.

## பழமையும் புதுமையும்

நாங்கள் பழமையை விடுத்து முற்றாகப் புதுமையினையே தழுவப்படாது. புதுமையும் பழமையும் ஒன்றோடொன்று தொடர்புடையன. மலையின் உச்சிக்கண் நின்று விழும் நீர்த்துளிகள் பலவும் ஒன்றுகூடி பெரிய ஆற்றொழுக்காகச் செல்லும்போது அவ்வாற்றொழுக்கின்கண் முன்னேயே மலையினின்றிழிந்த நீர்த்துளிகளும் அதன் பின்னர் நின்றிழிந்த நீர்த்துளிகளும் ஒன்று சேர்ந்து சுழன்று ஓடுவதைப்போலக் கொள்கைகளும், பழமையும் புதுமையும் கலந்த வடிவத்துடனேயே காணப்படும். பழங் கொள்கை

களையும் அடியொற்றியே எங்கள் சிவநெறி உண்மைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தொண்டாற்ற முன்வர வேண்டும்.

## குறிக்கோள்

யான் சிறப்புவகையாக வாலிபர்களுக்கேற்ற உண்மைகளை யடியொற்றியே எனது விரிவுரைப்பொருள்களை வகைப்படுத்தி யுரைப்பேன் எனக் கூறியதுகொண்டு பெரியோர்கள் வருத்தமடையமாட்டார்கள். ஏனெனில் யான் இதுபொழுது சைவ இலக்கிய உண்மைகளையாதல், சைவ இலக்கண உண்மைகளையாதல், சமய அறிவு முதிர்ந்த பெரியார்கள் சுவைக்கும் ஆராய்ச்சி நுண்மையுடன் பொருந்தக் கூறும் நுட்ப உரைவிரிக்குங் கருத்தெனக்கில்லை. மற்று,

இன்றைய உலக நிலையில் சைவ சமய ஆக்கத்துக்குச் செய்தாக வேண்டியவைகள் எவை யென்பதை நன்கு விளக்கிச் சிறப்பாகச் சைவத் தொண்டாற்ற முன்வந்து உழைக்கும் இளைஞர்களை ஊக்கிச் சைவ வாழ்வில் ஆற்றுப்படுத்துவதற் கேற்ற சில அறநெறிகளையே பேசுங் குறிக்கோளுடையே னென்பதை மீட்டும் உங்களுக் கறியத் தருகின்றேன். மற்று யான் கூறுகின்றவற்றுள் குன்றக் கூறல் மிகைபடக் கூறல் எனுங் குற்றங்கள் விரவவரின் அவற்றை அறிஞர்கள் பொறுத்துக் கொள்வார்கள் எனுந் துணிவுடையேன்.

## மகாநாட்டின் இன்றியமையாமை

எங்கள் தென் இந்தியாவின்கண் சைவ சித்தாந்த மகா சமாசம் எனப் பெயரிய ஓர் சமய வளர்ச்சி நிலையந் தோன்றி முப்பத்தைந்து ஆண்டுகளாக நிலைத்துச் சைவத் தொண்டாற்றி வருவதைச் சைவ மக்களாகிய நீங்கள் நன்குணர்வீர்கள். அச்சமாசத்தின்கண் ஒருநாட் கூட்டம் சைவ வாலிப மகாநாடு என்ற பெயருடன் நிகழ்வதுண்டு. ஆனால் அக்கூட்டத்தையிட்டுச் சிறந்தெடுத்துச் சொல்லவேண்டிய நிலையில் ஆங்கொன்றும் நிகழ்வதில்லை. கிறித்தவ மக்கள் மகமதிய மக்கள் முதலியபிற நெறியாளர்களும் வாலிபர்



சங்கங்களைத் தோற்றுவித்து அவற்றினால் சமயத் தொண்டாற்றி வருகின்றனர். எனவே சைவ வாலிபர்க்கெனச் சிறப்பாக ஓர் சைவ வாலிபர் மகாநாடு நிகழவேண்டியது மிக மிக இன்றியமையாமை வேண்டப்படுவ தொன்றே. நீங்கள் உங்கள் சைவ வாலிபர் மகாநாட்டை உங்களுக்குச் சிறந்த தனியுரிமை - சிறப்புரிமை ஆக்கிக் கொண்டீர்கள்; ஆனால் உங்கள் சைவ வாலிபர் மகா நாட்டைப்போலத் தனிச் சிறப்புடன் விளங்குவதொன்றில்லை. நீங்களே சைவ வாலிபர் மகாநாட்டுக்குத் தனிச் சிறப்புக் கொடுத்திருக்கின்றீர்கள்.

பெரியோர்களே! உங்கள் பின் மரபினராகிய வாலிபர்களை ஊக்கி அவர்கள் எடுத்துக்கொண்ட சைவப் பணியை முட்டின்றி நன்கு நடாத்தி நிறைத்தற்கேற்ற ஒழுங்குகளை உளவாக்கி வாழ்த்தி யெடுக்கவேண்டும். வருங்காலச் சைவத் தமிழ்நாட்டின் பெருமக்களாக வரும் சிறப்பு இயல்புகளை அறிவர்கள் இதுபொழுதே இளைஞர் வாலிபர் என்பவரின் உள்ளத்தில் வித்திடுதல் வேண்டும். எனவே பெரியோர்கள் இவ்வாலிப மகாநாட்டுக்கு இயன்றவரை உதவி செய்து ஊக்கிவிடும் பொறுப்பை உடையவராகின்றனர்.

## சமயக்கூட்டங்களின் இன்றியமையாமை

இனி இம்மகாநாடு அரசியற் கொள்கையைப்பற்றிப் பேசும் கூட்டமாக இல்லை. அரசியல் முறைக் கூட்டங்கள் எமக்கு வேண்டியதில்லை. இன்றியமையாது வேண்டப்படுவன சமயக்கூட்டங்களே யென்க. ஏனெனில், மேனாட்டார் புறப்பொருள் ஆய்வுக்கலைகளினால் புதிய புதிய போர்க் கருவிகளைப் பெருக்கிக்கொண்டு அதனால் போர் என்ற பெரிய நெருப்பைமூட்டி மக்களை எரித்து யொழிக்கின்றனர். இங்ஙன் அன்புநெறியைக் கொன்று அறவாழ்வைக் குலைத்து வன்பு நெறியே தலைதூக்கி நிற்கும் இந்த நூற்றாண்டில் - நாகரிக காலத்தில் அன்பு நெறியைப் பெருக்கும் சமயக் கூட்டமே மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகும்.

ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் முதியோர்களையும் எட்டுணையும் இரக்கமில்லாது கொன்று குவிக்கும் கொடுநெறியைச் சமய வாழ்வு என்ற அன்புநெறியால் வீழ்த்தி அருள்வாழ்வை உலகில் அலரச் செய்யாவிடின் உலகெலாம் மறநெறி பெருகிச் சிறிது காலத்தில் மன்பதையே யொழிந்துவிடும்.

## உலகியலறிவும் அன்பும்

உலகியலறிவும் அன்பும் மக்கள் வாழ்க்கைக் கின்றியமையாது வேண்டப்படுவன. அவற்றுள் அன்பு நெறி சுருங்க உலகியலறிவு பெருகிக்கொண்டது. உலகியலறிவை அளவுக்கு மிகுதியாகப் பெருக்கிக் கொண்டமையாற்றான் இன்றைய உலகில் மறநெறி தலைதூக்கி நின்று விளையாடுகின்றது. இங்ஙன் மறநெறி உணர்வுகளைப் பெருக்கும் உலகியலறிவுக் கலைகள் மேனாட்டில் மிகவும் வளர்கின்றதென்றும் தென்னாட்டில் அக்கலைகள் இல்லையென்றும் அறிஞர் கூறுவார்கள்.

"புத்தம் புதிய கலைக ளெல்லாம் மெத்த வளருது மேற்கே"

என்றார் சுப்பிரமணிய பாரதியார்.

## அறப்போர்

189764

மேற்கில் புத்தம் புதிய கலைகள் மெத்த வளர்ந்ததினாலே அவர்கள் என்ன இன்பத்தை இப்பொழுது அக்கலைகளினால் அடைகின்றார்கள்? இல்லை, அவர்கள் போர்நெருக்கடியினால் உறங்கவும் அஞ்சி வாழ்கின்றார்கள். இதுதான் அவர்கள் புத்தம் புதிய கலைகளினால் பெற்ற இன்பம். எங்கள் நாட்டிலும் புத்தம் புதியகலைகள் வளர்ந்திருந்தால் நாங்களும் பெருந்துன்பந்தான் படவேண்டும். கடவுள் எம்மை ஒருவாறு காப்பாற்றிவிட்டார். தமிழ்நாட்டில் பண்டைஞான்றை நிகழ்ந்த அறப்போர் முறைகளுடன் இஞ்ஞான்றைப் போர் முறையினை ஒப்புநோக்கினால் பழந்தமிழரின் போர்முறையைத் திருந்தாத போர் முறையெனச் சிலர் சொல்லவுந் துணிவார்கள் போலும்.

(தொடரும்)

சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சித்தாந்தசாத்திரம் மூலமும் உரையும்

### இரண்டாம் பதிப்பு

இந்நூல் நமது சமாஜப் பதிப்பாக முதன்முறை 1934ஆடு திருவதிகையில் வெளியிடப்பட்டது. அப்பதிப்பு விரைவில் செலவாகிச் சென்ற மூன்றாண்டுகளாகப் பிரதிகள் கிடைக்காமற் போயிற்று. வேறு எவரும் இதை அச்சிடத் துணிந்திலர். இப்போது இந்நூல் நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக இதுவரை அச்சுக்கு வாராத (சில ஏட்டுப்பிரதிகளிற் கிடைத்த) பழைய உரைகளுடன் நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று மயிலத்தில் நடந்த நமது சமாஜ ஆண்டு விழாவில் வெளியிடப்பெற்றது. முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பட்ட 1296+8 பக்கங்கள் கொண்ட பெரிய நூல்.

தனிப்பிரதி விலை ரூபா மூன்றேகால். ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12. நான்கு பிரதிகள் விலை ரூபா பன்னிரண்டு. ரயில்வே பார்சல்கூலி முதலியன வாங்குவோர் செலுத்தவேண்டும். சிலோன் தபாற்கூலி மேற்கொண்டு 4 அணா ஆகும். முன்பணமின்றி பிரதிகள் அனுப்பப்படமாட்டா. உடனே மணியார்டர் செய்து பிரதிகளைப் பெற்றுக்கொள்க.

---

# சிவப்பிரகாசம்

# மதுரைச் சிவப்பிரகாசர் உரை

இவ்வுரை பதினான்கு சாத்திர வுரைகளுள் மிகப்பழைமையானது; சிவஞான சுவாமிகள் காலத்துக்கு முற்பட்டது; திராவிட மகாபாடியம் போன்று மிக விரிவானது. இது 60 ஆண்டுகட்குமுன் அச்சிடப்பட்டது. இற்றைக்கு 50 ஆண்டுகளாக இவ்வுரைப் பிரதிகள் கிடைத்தில. இதை மீண்டும் வெளியிட எவரும் இதுகாறும் துணிந்திலர். நமது சமாஜத்தின் பதிப்பாக இது இப்போது வெளிவந்துள்ளது. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார்சுவாமிகள் தலைமையில் திருவண்ணாமலையில் இது வெளியிடப்பட்டது: தனிப்பிரதி விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஏழு. பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து. ரயில்வே பார்சல் செலவு முதலியன வேறு. முன்பணமனுப்பி இன்றே பிரதிகளைப் பெறுக.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 14. No. 2

உ

சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# திருவாசகம் மூலமும் பல ஆராய்ச்சி அகராதிகளும்

நமது தமிழ்நாட்டில் இதுவரையில் எந்த தமிழ்நூலையும் எவரும் வெளியிடாத ஒரு அரிய புதிய முறையில் இந்நூல் நமது சமாஜத்தினரால் சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனத்தன்று வெளியிடப் பெற்றது. திருவாசக மூலம் மிகச்செவ்விய முறையில் பைகா எழுத்திலும் சிறந்த பகுதிகள் தடித்த எழுத்திலும் தொடர்ச்சிப் பாட்டெண், தொடர்ச்சிப் பதிக எண், தொடர்ச்சி அடியெண் முதலியவற்றோடு அச்சிடப்பட்டுள்ளது. இதனுடன் அரும்பொருளகராதி, உவமை அகராதி, சாத்திரமேற்கோளகராதி, சிவபெருமான் பெயரகராதி, சிறப்புப் பெயரகராதி, சொல்லகராதி, தலக்குறிப்பட்டவணை, திருவாசக உண்மை, திருவாசகத் திருவுள்ளக்கிடை, திருவெம்பாவைக் கருத்து, தேவார ஒப்புமை அகராதி, பாடபேத அட்டவணை, யாப்புவகை அட்டவணை முதலிய பல் வேறுவகையான ஆராய்ச்சி அகராதிகளும் அட்டவணைகளும் இப்பதிப்பில் வெளிவந்துள்ளன. இவற்றின் துணைகொண்டு திருவாசகத்துக்கும் தேவாரத்துக்கும் உள்ள பல ஒற்றுமைப் பகுதிகள், பதினான்குசாத்திர உரைகளுள் திருவாசகப் பகுதிகள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டு பொருள் கொள்ளப்பட்ட முறைகள், பதியிலக்கண நுட்பங்கள் துலங்கச் சிவபெருமான் கூறப்படும் வகைகள், ஒவ்வொரு சொல்லும் திருவாசகத்தில் காணப்படும் இடங்கள் முதலிய பல அருமையான விஷயங்களை எவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம். மொழியாராய்ச்சி, பொருளாராய்ச்சி, சாத்திர ஆராய்ச்சி முதலியவற்றிற்கு இப்பதிப்பு சிறந்த துணைக்கருவி நூலாகும். 286+16 பக்கங் கொண்ட நூல். நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு முழுகலிக்கோ பைண்டு செய்யப் பெற்றது.

**தனிப் பிரதி விலை அணா 12.** ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 6.

**11 பிரதிகள் விலை ரூபா 7½.**

ரயில்வே பார்சல் கூலி முதலியன வேறு.

முன் பணமின்றி பிரதிகள் அனுப்பப்பட மாட்டா. உடனே மணியார்ர் செய்து நூலைப் பெற்றுக் கொள்க.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.